



# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● வெள்ளி, ஆகஸ்ட் 20, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.231

https://www.hindutamil.in

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

● 10 பக்கங்கள் ₹ 7





### எல்லோருக்கும் எல்லாவற்றையும் இலவசமாக வழங்கினால் அரசு திவாலாகிவிடும்

# பழைய ஓய்வூதியத்துக்கு வாய்ப்பு இல்லை

**● சட்டப்பேரவையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் விளக்கம்**

■ சென்னை

எல்லோருக்கும் எல்லாவற்றையும் இலவசமாக வழங்கினால் அரசு திவாலாகிவிடும். மாநிலத்தின் நிதி சூழ்நிலை இக்கட்டான நிலையில் இருப்பதால், பழைய ஓய்வூதியத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து முடிவு எடுக்க முடியவில்லை என்று சட்டப்பேரவையில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.



சட்டப்பேரவையில், 2021-22 நிதியாண்டுக்கான திருத்திய பட்ஜெட் மற்றும் வேளாண் பட்ஜெட் மீதான விவாதம் கடந்த 16-ம் தேதி தொடங்கி நேற்று நிறைவடைந்தது. இதைத் தொடர்ந்து, விவாதத்துக்கு பதில் அளித்து, நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கூறியதாவது:

திராவிட இயக்க கொள்கைகளை பின்பற்றி, முதல்வர், 'எல்லோருக்கும் எல்லாம்' என்று கூறியுள்ளார். அதை கொஞ்சம் திருத்திக் கூற விரும்புகிறேன். சமூக, பொருளாதார நீதிக்கு ஏற்ப. எல்லோருக்கும் எல்லாவற்றையும் இலவசமாக வழங்க முடியாது. அப்படி செய்தால் அரசு திவாலாகிவிடும். ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற ஆட்சி, இந்த கொள்கையில் இருந்து விலகி, யாரெல்லாம் எதையெல்லாம் கைப்பற்ற முடியுமோ அதை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள் என்ற அடிப்படையில் நடந்துள்ளது. இது எங்கள் கருத்துக்கு விரோதமானது. இதை மாற்றியே ஆக வேண்டும்.

இன்றைய சூழலில், மாநிலத்துக்கான பல அதிகாரங்கள், மாநிலங்களிடம் இல்லை. எனவே, நம்மிடம் இருக்கும் அதிகாரத்தைக் கொண்டு சிறப்பான நிர்வாகத்தை கட்டமைக்க வேண்டும்.

## 5 திருத்தங்கள் அவசியம்

இதற்காக, 5 திருத்தங்களை சுட்டிக் காட்டியுள்ளோம். தகவல் அடிப்படையில் நிர்வாகம் என்பது முதலாவது. ஆக.13-ல் பேரவையில் பெட்ரோல் குறைப்பு அறிவிக்கப்பட்டது. உடனடியாக தகவல் திரட்ட தொடங்கினோம். இந்த தகவல்கள் மத்திய அரசிடம் உள்ளன.

பெட்ரோல் விற்பனையைப் பொருத்தவரை, ஆக.1 முதல் 13 வரை 91 லட்சம் லிட்டர் விற்பனையான நிலையில், வரியை குறைத்த பிறகு 14 முதல் 16-ம் தேதி வரை 1.03 கோடி லிட்டர் விற்பனை ஆனது. மக்கள் அதிக அளவில் பெட்ரோலை பயன்படுத்தியதால் விற்பனை அதிகரித்துள்ளது. இந்த அளவுக்கு தகவல் இருந்தால் அரசை சிறப்பாக நடத்த முடியும்.

இரண்டாவது மத்திய - மாநில அரசு உறவு. இதை பயன்படுத்தி, மத்திய அரசிடம் இருந்து முதல்வர் மூலம், தரவு சேமிப்பை செய்யப் போகிறாம். அதாவது, வருமான வரி, பெட்ரோல் டீசல் பயன்பாடு, விற்பனை, தடுப்பூசி போடப்பட்ட விவரம் இவற்றை கேட்டுப் பெற சட்டம், விதிமுறைகள் உருவாக்கி முயற்சி எடுக்கப் போகிறோம். மக்களின் நலன், நிலம், பணத்தை பாதுகாப்பது, இடர் மேலாண்மை என்பது அடுத்த முக்கிய அம்சம். மத்திய அரசின் திட்டங்கள் அனைத்தையும் மொழிபெயர்த்து, திட்டத்தின் தன்மை, பயன்களை மக்களிடம் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது சீர்திருத்தத்தின் முதல்கட்டம் ஆகும். இன்னும் பல நடவடிக்கைகள் வர உள்ளன. ஆண்டு பொருளாதாரக் கணக்கெடுப்பு கடந்த 10 ஆண்டுகளாக பட்ஜெட்டுக்கு முன்னால் வெளியிடப்படவில்லை. இது அடுத்த ஆண்டு முதல் வெளியிடப்படும்.

## 110 விதியின் கீழ் அறிவிப்பு விவரம்

கடந்த 10 ஆண்டுகளில் 110 விதியின் கீழ் எத்தனை அறிவிப்புகள் வந்தன. எவை செயல்படுத்தப்பட்டன. கைவிடப்பட்டவை, நிதி பெற்ற விவரம், பட்ஜெட்டுக்கு உட்படாத நிதி எங்கிருந்து வந்தது, திட்டமிடப்படாத அறிவிப்புகள் அரசை எவ்வாறு பாதிக்கின்றன என்பது குறித்து ஆய்வு செய்து, இந்த கூட்டத் தொடரிலேயே அவையில் சமர்ப்பிக்கப்படும்.

இன்னும் பல துறைகளில் பல காரணங்களுக்காக பல ஆய்வுகள் நடக்க உள்ளன. இதை பழிவாங்கும் நடவடிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

நாம் இக்கட்டான சூழலில் உள்ளோம். அனைவருடைய ஒத்துழைப்புடன் தான் முன்னேற முடியும். அரசின் நிதிச் சூழலை மேம்படுத்தாமல், இன்று இருக்கும் அளவைவிட சிறப்பாக குடிநீர், சாலை, மருத்துவமனை, வீடுகள் ஆகியவற்றை கட்டித் தர முடியாது. எனவே, இன்று உள்ள சூழலை திருத்தியே ஆக வேண்டும்.

கடந்த 5 ஆண்டுகளில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய், மத்திய அரசின் நிதி என ரூ.4 லட்சம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால்தான் எல்லா அரசுகளும் வேறு வழியின்றி, சில செலவுகளை ஒத்திவைக்கின்றன.

ஊதியக் குழு பரிந்துரைகள் தள்ளி அமல்படுத்தப்பட்டன, அகவிலைப்படி உயர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டிருந்தன. நிதி இல்லாதபோது, திறமை இருந்தாலும் சமாளிக்க முடியாது. தேவை உள்ள நேரத்தில் வரியை அதிகரிக்காவிட்டால், அரசை நடத்த முடியாது. முன்பு, மதிய உணவு திட்டத்தை செயல்படுத்த வணிக வரி உயர்த்தப்பட்டது.

மிக கடினமான சில பிரச்சினைகளை ஒத்திவைத்துக் கொண்டே வருகிறோம். பழைய ஓய்வூதியத் திட்டம் கடந்த 18 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. அதுபற்றி முடிவெடுக்காமல் 3, 4 முறை அரசுகள் ஆட்சிக்கு வந்து சென்றுவிட்டன. நிதி சூழ்நிலை இக்கட்டான நிலையில் இருப்பதால், அதற்கான முடிவை எடுக்க முடியவில்லை.


சில செலவுகள் பண வீக்கத்துக்கு ஏற்ப அதிகரிக்கப்படுகிறது. பொருட்கள் விலை அதிகரிப்பால் அகவிலைப்படி உயர்த்தப்படுகிறது. அகவிலைப்படி உயர்வின்போது, ஓய்வூதியம் அதிகரிக்கப்படுகிறது. ஆனால், விதவைகளுக்கான உதவித்தொகை அதிகரிக்கப்படுவது இல்லை. வரி உயர்த்தப்படுவது இல்லை. இதை மாற்றியாக வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதில் உரையில் தெரிவித்தார்.










### பழிவாங்கும் நடவடிக்கையில் திமுக அரசு ஈடுபடுவதாக

# ஆளுநரிடம் இபிஎஸ், ஓபிஎஸ் மனு

**● கோடநாடு வழக்கை திசை திருப்புவதாக குற்றச்சாட்டு**

■ சென்னை

ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை சந்தித்த அதிமுக ஒருங்கிணைப்பாளர்கள் ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி உள்ளிட்ட நிர்வாகிகள், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் திமுக அரசு ஈடுபட்டுள்ளதாக மனு கொடுத்தனர். அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு குறுக்கு வழியில் கோடநாடு வழக்கை திமுக அரசு திசை திருப்புவதாக பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் மறு விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இந்த வழக்கில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி மற்றும் அதிமுக நிர்வாகிகள் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இதையடுத்து, திமுக பொய் வழக்கு போட்டுள்ளதாக கூறி, பேரவையை அதிமுக புறக்கணித்துள்ளது.

இந்நிலையில், கிண்டி ராஜ்பவனில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி ஆகியோர் நேற்று காலை 11 மணி அளவில் சந்தித்துப் பேசினர். துணை ஒருங்கிணைப்பாளர்கள் கே.பி.முனுசாமி, ஆர்.வைத்திலிங்கம், அமைப்பு செயலாளர்கள் பி.தங்கமணி, எஸ்.பி.வேலுமணி, டி.ஜெயக்குமார், வழிகாட்டும் குழு உறுப்பினர் சி.வி.சண்முகம் ஆகியோரும் உடன் இருந்தனர்.

அரசு இயந்திரத்தை தவறாக பயன்படுத்தி அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளில் திமுக ஈடுபட்டுள்ளதாக ஆளுநரிடம் மனு அளித்தனர். பின்னர், செய்தியாளர்களிடம் பழனிசாமி கூறியதாவது:

கோடநாடு எஸ்டேட்டுக்குள் சயானும், அவரது கூட்டாளிகளும் அத்துமீறி நுழைந்து கொள்ளையடித்து, காவலாளியை கொலை செய்த வழக்கில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு நீதிமன்றத்தில் முடிவுறும் நிலையில் உள்ளது. இந்த நிலையில், இந்த வழக்கில் புதிதாக விசாரணை மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறுகிறார். இதுபற்றி கேட்டால், தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்ததாக கூறுகிறார். கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு என்பது சட்ட ரீதியாக நடைபெறுவதாகும். தேர்தல் அறிக்கைக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது.

இந்த வழக்கில் மறு விசாரணை கோரி டிராபிக் ராமசாமி தொடர்ந்த வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்த வழக்கை 3 மாதங்களுக்குள் முடிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் தனித்தனியே உத்தரவிட்டுள்ளனர்.

கோடநாடு வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகள் அனைவரும் கேரளாவை சேர்ந்தவர்கள். பல குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள். அவர்களுக்கு ஆதரவாக திமுகவை சேர்ந்த வழக்கறிஞர்கள் வாதாடுகின்றனர். கொலைக் குற்றவாளிகளுக்காக திமுக ஏன் இவ்வளவு அக்கறையோடு வாதாடுகிறது.

குற்றவாளி சயானுக்கு சம்மன் அனுப்பப்பட்டு, ரகசிய வாக்குமூலம் பெறப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன. அதில் என்னையும், வேறு சிலரையும் இணைத்துள்ளனர். நீதிமன்றத்தில் அனுமதி பெறாமல், அரசு நிர்ப்பந்தம் காரணமாக போலீஸார் சயானை அழைத்து விசாரணை நடத்தியுள்ளனர்.

தமிழகம் முழுவதும் கடைநிலை ஊழியர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை பணியிட மாற்றம் செய்ததுதான் திமுக அரசின் 100 நாள் சாதனை. இந்த 100 நாட்களில் மக்கள் வேதனையும், சோதனையும்தான் அடைந்துள்ளனர். அதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட பல்வேறு திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கிராம மக்களுக்கு வேலை கிடைத்து வந்தது. இத்திட்டத்துக்கு நிதி ஒதுக்காமல் முடக்கியுள்ளனர். அனைத்து துறைகளிலும் திமுக அரசு தோல்வி அடைந்து வருகிறது. கரோனா தொற்றை கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கிறது. இதை மறைக்கவே, பழிவாங்கும் நோக்கத்துடன் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீது திமுக அரசு வழக்கு தொடர்ந்து வருகிறது. நேரடியாக அரசியலை சந்திக்க முடியாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு குறுக்கு வழியில் கோடநாடு வழக்கை திசை திருப்ப பார்க்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

இந்து டாக்கீஸ் உலகத் திரை உலா
8–ம் பக்கத்தில்..






இந்து தமிழ் திசை




## பளிச் பத்து 51 — ஆப்கானிஸ்தான்

தொகுப்பு: பி.எம்.சுதிர்



- 1946–ம் ஆண்டில் ஐநா சபையில் ஆப்கானிஸ்தான் உறுப்பு நாடானது.
- ஆப்கானிஸ்தான் குடிமக்களில் 42 சதவீதம் பேர் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளனர்.
- கடந்த 50 ஆண்டுகளாக அதிக அளவில் உள்நாட்டு போர்கள் நடந்துவரும் நாடாக ஆப்கானிஸ்தான் உள்ளது.
- உள்நாட்டுப் போர் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் மட்டும் 26 லட்சம் பேர் அகதிகளாக அந்நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.
- 1996 முதல் 2001–ம் ஆண்டுவரை தலிபான்களின் ஆட்சியின்கீழ் ஆப்கானிஸ்தான் இருந்தது.
- ஆப்கானிஸ்தானின் முக்கிய நீராதாரமாக ஹெல்மண்ட் நதி உள்ளது.
- மது குடிப்பது ஆப்கானிஸ்தானில் சட்ட விரோத செயலாகும்.
- ஆப்கான் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21–ம் தேதி புத்தாண்டைக் கொண்டாடுகின்றனர். இந்நாளை, 'நவ்ரோஸ்' என்று அவர்கள் அழைக்கின்றனர்.
- ஆப்கானிஸ்தானில் உள்ள பாமியான் குகைகளில் கிமு 650–ல் உலகின் முதல் ஆயில் பெயின்டிங்குகள் வரையப்பட்டன.
- ஆப்கானிஸ்தான் மக்களின் முக்கியத் தொழில் விவசாயமாகும்.



## நல்லதே நடக்கும்

• ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் •

**20-08-2021** பிலவ 4 ஆவணி

**வெள்ளிக்கிழமை**

**திதி** : திரயோதசி இரவு 8.40 வரை. அதன் பிறகு சதுர்த்தசி.
**நட்சத்திரம்** : உத்திராடம் இரவு 9.57 வரை. பிறகு திருவோணம்.
**நாமயோகம்** : ஆயுஷ்மான் மாலை 4.35 வரை. பிறகு சௌபாக்யம்.
**நாமகரணம்** : கௌலவம் காலை 9.30 வரை. அதன் பிறகு தைதுலம்.
**நல்ல நேரம்** : காலை 6.00-9.00, மதியம் 1.00-3.00, மாலை 5.00-6.00, இரவு 8.00-10.00 மணி வரை.
**யோகம்** : சித்தயோகம் இரவு 9.57 வரை. பிறகு மந்தயோகம்.
**சூலம்** : மேற்கு, தென்மேற்கு காலை 10.48 மணி வரை.
**பரிகாரம்** : வெல்லம்
**சூரிய உதயம்**: சென்னையில் காலை 5.57 **அஸ்தமனம்:** மாலை 6.27

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | காலை 10.30-12.00 | நாள் | வளர்பிறை |
| எமகண்டம் | மாலை 3.00-4.30 | அதிர்ஷ்ட எண் | 1, 2, 6 |
| குளிகை | காலை 7.30-9.00 | சந்திராஷ்டமம் | மிருகசீரிஷம், திருவாதிரை |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
HOUSE OF L.K.S. LKS GH SINCE 1925
T.NAGAR LKS®
GOLD HOUSE (P) LTD
SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்புடன் நடந்து கொள்வார்கள். விலகியிருந்த நண்பர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள்.

**ரிஷபம்:** வெளிப்படையான பேச்சால் சில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். எதிலும் மகிழ்ச்சி கிட்டும். கணவன் – மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு.

**மிதுனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், அத்தியாவசிய செலவுகள் அடுத்தடுத்து இருந்துகொண்டே இருக்கும். சொந்தபந்தங்களால் அன்புத் தொல்லைகள் உண்டு.

**கடகம்:** மனசாட்சிக்கு விரோதமின்றி செயல்பட வேண்டும் என்று நினைப்பீர்கள். விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள்.

**சிம்மம்:** சகோதரரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி:** புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வீட்டுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கலைப்பொருட்கள் சேரும்.

**துலாம்:** மகிழ்ச்சியுடன் காணப்படுவீகள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரசு காரியங்கள் விரைந்து நிறைவேறும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். பங்கு வர்த்தகம் லாபம் தரும்.

**விருச்சிகம்:** வெகுநாட்களாக மனதளவில் இருந்துவந்த பிரச்சினைகளுக்கு இன்று தீர்வு காண்பீர்கள். கணவன் – மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளின் உடல்நிலை சீராக இருக்கும்.

**தனுசு:** மனநிறைவுடன் காணப்படுவீர்கள். குடும்பத்தினருடன் அனுசரித்து செல்வீர்கள். பிள்ளைகளின் நீண்டநாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். சகோதர, சகோதரிகளால் நன்மையுண்டு.

**மகரம்:** பல வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வாகனத்தை எடுக்கும் முன் எரிபொருள் இருக்கிறதா என பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** ஆடம்பரமான செலவுகளை குறைப்பது நல்லது. மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். விருந்தினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு.

**மீனம்:** சுறுசுறுப்புடன் செயல்பட்டு காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். குடும்பத்தினரிடையே ஒற்றுமை நிலவும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். சகோதரர் வகையில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

### காந்தியின் கனவை நனவாக்கும் விதமாக

# தமிழகத்தில் பூரண மதுவிலக்கை விரைவில் அமல்படுத்த வேண்டும்

● பிரிவு உபச்சார விழாவில் மூத்த நீதிபதி என்.கிருபாகரன் வேண்டுகோள்

■ சென்னை

காந்தியின் கனவை நனவாக்கும் விதமாக தமிழகத்தில் பூரண மதுவிலக்கை விரைவில் ஆட்சியாளர்கள் அமல்படுத்த வேண்டும் என பிரிவு உபச்சார விழாவில் மூத்த நீதிபதி என்.கிருபாகரன் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜிக்கு அடுத்தபடியாக 2-வது மூத்த நீதிபதியாக பணியாற்றிய என்.கிருபாகரன் இன்றுடன் ஓய்வு பெறுகிறார். இதையடுத்து அவருக்கு பிரிவு உபச்சார விழா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி தலைமையில் நேற்று நடந்தது. இதில் அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகளும், வழக்கறிஞர்கள் சங்க நிர்வாகிகளும், ஓய்வு பெற்ற நீதிபதி எம்.சத்தியநாராயணன், நீதிபதி என்.கிருபாகரனின் தாயார் ராஜம்மாள் உள்ளிட்ட குடும்பத்தினரும் பங்கேற்றனர்.

அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் பேசும்போது, "நீதிபதி என்.கிருபாகரன், ஹெல்மெட் கட்டாயம், நீட் தேர்வு, குற்றால அருவி சுத்தம், பாலியல் வன்கொடுமை, அரசுப்பள்ளி மாணவர்களுக்கு இடஒதுக்கீடு, தமிழ் வழிக்கல்விக்கு முன்னுரிமை, மது போதையில் வாகனம் ஓட்டினால் கைது, உள்ளாட்சி தேர்தல் ரத்து, ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி, டிக் டாக் தடை, 2-ம் வகுப்பு வரை வீட்டுப் பாடம் கொடுக்கக்கூடாது, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சட்டப்பூர்வ வாரிசுகள், நீட் மாணவர்களுக்கான உளவியல் ஆலோசனை, மாணவர்களின் தற்கொலையை தடுத்தல், சதுப்பு நிலப் பாதுகாப்பு என சமூக நோக்குடன் அதிரடியாக தீர்ப்புகளை வழங்கி மக்கள் நீதிபதியாக திகழ்ந்தவர்" என பாராட்டிப் பேசினார்.

அதன்பிறகு நீதிபதி என்.கிருபாகரன் தனது ஏற்புரையில் பேசும்போது, "எனது தந்தையின் கடின உழைப்பால் இன்று நான் உங்கள் முன் நீதிபதியாக நிற்கிறேன். இத்தருணத்தில் உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி பி.சதாசிவம், உச்ச நீதிமன்ற நீதிபதியாக வுள்ள எம்.எம்.சுந்தரேஷ், நீதிபதியாக பணியாற்றி ஓய்வுபெற்ற எம்.சத்திய நாராயணன் ஆகியோருடன் எனது சீனியர்களையும் நினைவு கூர்ந்து நன்றி சொல்ல வேண்டும்.

பொதுமக்களின் கடைசி புகலிடம் இந்த நீதிமன்றம். அதற்கு வழக்கறிஞர்கள் சரியாக இருந்தால்தான் நீதித் துறை சிறப்பாக செயல்பட முடியும். இல்லையென்றால் மக்கள் நீதித் துறையின் மீது நம்பிக்கை இழந்துவிடுவர். நாட்டு விடுதலைக்காக போராடிய பலர் வழக்கறிஞர்கள். இன்று வழக்கறிஞர் என்றாலே எதிர்மறையான சிந்தனைதான் மக்களிடம் உள்ளது.

வழக்கறிஞர் தொழிலின் புனிதம் காக்கப்பட வேண்டும். எனது பணிக்காலத்தில் இதுவரை கருத்து வேற்றுமையால் பிரிந்த ஆயிரம் தம்பதிகளை சேர்த்து வைத்துள்ளேன். யாருக்கும் பயப்படாமல் மனசாட்சிக்கு பயந்து மனிதாபிமானத்துடன் நேர்மையாக தீர்ப்பளித்துள்ளேன் என்ற மன திருப்தியுடன் செல்கிறேன்.

ஆனால் வழக்கறிஞர் தொழிலை முறைப்படுத்த முடியாததும், டாஸ்மாக் கடைகளை மூட முடியாததும் வேதனைதான். காந்தியின் கனவை நனவாக்கும் விதமாக பூரண மதுவிலக்கை விரைவில் தமிழகத்தில் ஆட்சியாளர்கள் அமல்படுத்த வேண்டும். அதுபோல நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நீதிபரிபாலனம் எளிதாக கிடைக்க உச்ச நீதிமன்ற கிளை சென்னை உள்ளிட்ட நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அமைய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

பணி ஓய்வு பெற்ற நேற்று மட்டும், தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி மற்றும் நீதிபதிகள் எம்.துரைசாமி, எஸ்.வைத்யநாதன், வி.பார்த்திபன், பி.வேல்முருகன், ஆர்.பொங்கியப்பன், பி.புகழேந்தி, டி.வி.தமிழ்செல்வி என 8 அமர்வுகளில் நீதிபதி என்.கிருபாகரன் அமர்ந்து பல்வேறு முக்கிய வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கண் கலங்கிய நீதிபதி என்.கிருபாகரன்!

முன்னதாக நேற்று பிற்பகலில் தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜியுடன் நீதிபதி என்.கிருபாகரன் முதன்மை அமர்வில் அமர்ந்து வழக்குகளை விசாரித்தார். அப்போது, வழக்குகளுக்கு ஆஜராகி இருந்த வழக்கறிஞர்கள் அனைவரும் நீதிபதி கிருபாகரனின் பணியை வெகுவாகப் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். அதில் நெகிழ்ச்சியடைந்த நீதிபதி கிருபாகரன், கண் கலங்கினார். அப்போது அவர், "நான் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக பணியாற்றிய இத்தனை ஆண்டுகளில், இந்த கடைசி நாளில்தான் முதன்முறையாக தலைமை நீதிபதியுடன் அமர்ந்து வழக்குகளை விசாரிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. எனக்கு ஒத்துழைப்பு கொடுத்த அனைவருக்கும் மனமார நன்றி தெரிவிக்கிறேன்" என்றார்.



▲ சென்னை உயர் நீதிமன்றத்தில் மூத்த நீதிபதியாக பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெற உள்ள நீதிபதி என்.கிருபாகரனுக்கு பிரிவு உபச்சார விழா சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நீதிபதி என்.கிருபாகரனுக்கு தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி நினைவுக் கேடயம் வழங்கினார். அருகில் (இடமிருந்து) உயர் நீதிமன்ற நீதிபதிகள் பி.என்.பிரகாஷ், டி.எஸ்.சிவஞானம், எம்.எம்.சுந்தரேஷ், டி.ராஜா உள்ளனர். படம்: ம.பிரபு

## தமிழகத்தில் புதிதாக 1,702 பேருக்கு கரோனா

■ சென்னை

தமிழகத்தில் புதிதாக 1,702 பேருக்கு கரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. முதியவர்கள் உட்பட 29 பேர் உயிரிழந்தனர்.

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 959, பெண்கள் 743 என மொத்தம் 1,702 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக கோவையில் 198, சென்னையில் 193, ஈரோட்டில் 147, தஞ்சாவூரில் 112 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன்மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 25 லட்சத்து 95,935 ஆக அதிகரித்துள்ளது. இதுவரை 25 லட்சத்து 41,432 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 1,892 பேர் குணமடைந்து வீடுகளுக்குச் சென்றனர். தமிழகம் முழுவதும் 19,864 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 29 பேர் நேற்று உயிரிழந்தனர். சென்னையில் மட்டும் இதுவரை 8,373 பேர் இறந்துள்ளனர் என்று தமிழக சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கோவை, வேலூர் உள்ளிட்ட 13 மாவட்டங்களில்

## நாளை கனமழைக்கு வாய்ப்பு

■ சென்னை

கோவை, சேலம், வேலூர், உள்ளிட்ட 13 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நா.புவியரசன் செய்தியாளர்களிடம் நேற்று கூறியதாவது:

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வெப்பச் சலனம் காரணமாக 20-ம் தேதி நீலகிரி, கோவை, தென் மாவட்டங்கள், கடலோர மாவட்டங்கள், அதை ஒட்டிய உள் மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

21-ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, பெரம்பலூர், அரியலூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், வேலூர், ராணிப்பேட்டை, நீலகிரி, கோவை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கனமழையும், மற்ற மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழையும் பெய்யக் கூடும்.

22-ம் தேதி திருச்சி, மதுரை, நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கனமழையும், மற்ற மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இடி, மின்னலுடன் மிதமான மழையும் பெய்யக் கூடும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழகத்தில் செப்.1-ம் தேதி முதல்

## 14 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்கிறது

■ சென்னை

தமிழகத்தில் செப்.1-ம் தேதி முதல் 14 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்கிறது. 8 சதவீதம் வரை கட்டண உயர்வு இருக்கும் என தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் மேற்கு மற்றும் தென் மாவட்டங்களுக்குச் செல்லும் சாலைகளில் உள்ள 14 சுங்கச்சாவடிகளில் செப்.1-ம் தேதி முதல் கட்டணம் உயர்த்தப்படுகிறது.

அதன்படி, திண்டிவனம் - உளுந்தூர்பேட்டை சாலையில் உள்ள விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை - பாடலூர் சாலையில் உள்ள திருமாந்துறை, சென்னை - தடா சாலையில் உள்ள நல்லூர், சேலம் - உளுந்தூர்பேட்டை சாலையில் உள்ள மேட்டுப்பட்டி, சேலம் - குமாரபாளையம் சாலையில் உள்ள வைகுந்தம், திருச்சி - திண்டுக்கல் சாலையில் உள்ள பொன்னம்பலப்பட்டி, தஞ்சாவூர் - திருச்சி சாலையில் உள்ள வாழவந்தான் கோட்டை உள்ளிட்ட 14 சுங்கச்சாவடிகளில் இந்த கட்டண உயர்வு அமலுக்கு வருகிறது.

**8 சதவீதம் வரை கட்டணம் உயரும்**

இதுதொடர்பாக தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "தேசிய நெடுஞ்சாலைத் துறை ஒப்பந்தப்படி, ஆண்டுதோறும் கட்டணம் உயர்த்தப்படுவது வழக்கம். இது புதிய விதிமுறை அல்ல. அதிகபட்சமாக 8 சதவீதம் வரை கட்டணம் உயரும் என எதிர்பார்க்கிறோம். கட்டண உயர்வு குறித்த அறிவிப்பை தேசிய நெடுஞ்சாலைத் துறை அடுத்த வாரம் வெளியிடும்" என்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு மணல் லாரி உரிமையாளர்கள் நலச்சங்கங்கள் கூட்டமைப்பின் தலைவர் யுவராஜ் கூறும்போது, "சுங்கச்சாவடிகளில் ஆண்டுதோறும் கட்டணத்தை உயர்த்துவதால், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வதோடு, வாகன ஓட்டிகள், வாகன உரிமையாளர்களும் அவதிப்படுகின்றனர்.

எனவே, தமிழகத்தில் பல ஆண்டுகளாக இருக்கும் சுங்கச்சாவடிகளை இழுத்து மூட வேண்டும், நெடுஞ்சாலைகளில் கட்டமைப்பு பணிகளை மேம்படுத்த வேண்டும், சுங்கச்சாவடிகளில் தமிழர்களையும் பணியமர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழக அரசிடம் விரைவில் மனு அளிக்கவுள்ளோம்" என்றார்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்

## ஆட்சியர் அலுவலகம் கட்ட தடை

■ சென்னை

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டத்துக்கு கோயில் நிலத்தில் ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில், விழுப்புரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிதாக கள்ளக்குறிச்சி மாவட்டம் உருவாக்கப்பட்டது. இதற்காக வீரசோழபுரம் என்னும் இடத்தில் அர்த்தநாரீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோயில் நிலத்தை குத்தகைக்கு எடுத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜன் நரசிம்மன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இதற்காக உரிய அனுமதி, ஒப்புதல் பெறாமல் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளக் கூடாது என உத்தரவிட்டு இருந்தது. ஆனால் தொடர்ந்து கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறி ரங்கராஜன் நரசிம்மன் தமிழக அரசுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்ஜிப் பானர்ஜி, நீதிபதி பி.டி.ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று நடந்தது. அப்போது, மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகள் நடைபெறவில்லை என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தரப்பில், சுற்றுச்சூழல் மற்றும் நகரமைப்பு திட்ட இயக்குநர் அனுமதி பெற்றும் கட்டுமானப் பணியை மேற்கொள்ள முடியவில்லை என்பதால் தங்களுக்கு இழப்பு ஏற்படும் என தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்து, கோயில் நிலத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டலாமா? வேண்டாமா என்பது குறித்து முதலில் முடிவெடுக்க வேண்டியிருப்பதாக கூறிய நீதிபதிகள், மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமான பணியை மேற்கொள்ள இடைக்கால தடை விதித்து விசாரணையை 4 வாரத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

# கர்பலா – இஸ்லாமிய எழுச்சியின் ஆணிவேர்

### ஹாஃபிஸ் எஸ். ஃபக்கீர் முஹம்மது ஜலாலீ



இஸ்லாமிய ஆண்டின் முதல் மாதம் முஹர்ரம் 10-ம் நாளில்தான் ஜனநாயகத்துக்கும், சர்வாதிகாரத்துக்கும் 'கர்பலா' என்ற இடத்தில் யுத்தம் நடந்தது. வாரிசு அரசியல் இஸ்லாத்தில் இல்லை என்பதால்தான் நபிகளார் (ஸல்) அவர்களுக்கு ஆண் மக்கள் பிறக்க வைக்கப்பட்டு, சிறுவயதிலேயே அல்லாஹ்வால் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

பதவியிலும் சரி, பங்கிலும் கூட வாரிசுரிமை இல்லை என்பதால்தான், ஃபாத்திமா (ரழி) அவர்களிடம் கலீஃபா அபூபக்ர் ஸித்தீக் (ரழி) அவர்கள், 'தலைவரின் குடும்பத்துக்கு உதவித்தொகை தரலாமே தவிர பங்கெல்லாம் கிடையாது' என மறுத்துவிட்டது இதற்கு சாட்சி.

அலீ (ரழி) அவர்களின் கிலாஃபத்தில் நடந்த உமையா - குறைஷ் குழுச் சண்டையான 'ஷிஃப்ஃபீன்' அன்றைய பல நபித்தோழர்களை தடுமாறச் செய்து, ஹஸ்ரத் முஆவியா (ரழி) அவர்களுக்கு கிலாஃபத்தில் பங்கு கொடுத்தது. அலீ (ரழி) ஷஹீதான பின், "முஆவியாவே முழு இஸ்லாமிய தேசத்துக்கும் கலீஃபாவாக இருப்பது என்றும், அவர் வஃபாத்தானால், மக்கள் தாங்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கும் ஒருவரை கலீஃபாவாக்கிக் கொள்ளலாம்" என்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

**மன்னராட்சி பிரகடனம்**

ஆனால் மக்காவின் குரைஷ் - உமையா குடும்பத்தினரில், குரைஷ்களில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் தேர்ந்தெடுத்ததும், தொடர்ந்து குரைஷ்களே தலைமைக்கு தகுதியானவர்களாக வந்து கொண்டிருப்பதும் உமையாக்களின் கண்களை உறுத்தியது. எனவே உமையா குடும்பத்தின் முஆவியா (ரழி) சிரியாவின் கவர்னர் ஆனதும், உமையாக்களின் ஆட்சியில் இஸ்லாமிய அரசு வர விரும்பி, மக்கள் ஆட்சி (கலீஃபா) என்பதிலிருந்து மன்னராட்சி (அமீர்) என பிரகடனப்படுத்தி, தான் உலகை விட்டுப்பிரியும் நேரம் தன் மகன் யஸீதை வாரிசாக்கி மகிழ்ந்தார்கள்.

யஸீது ஒருவேளை நல்ல மனிதனாக இருந்தால் கூடப் பரவாயில்லை. தாகத்துக்குக் கூட மது அருந்துபவனாக, பெண் பித்தனாக இருப்பது, இஸ்லாமிய உலகுக்கு தலைமையேற்கத் தகுதியானவன் அல்ல என்பதை சுட்டியது. அன்றைய முஸ்லிம் உலகில் கலிஃபாவாகத் தகுதியானவர் ஹுஸைன் (ரழி) என்பதால், அவர் மூலம் மக்கள் கலகத்தில் ஈடுபடலாம் என்பதால், மதினாவின் கவர்னர் வலீது மூலம் ஹுஸைன் (ரழி) அவர்கள் யஸீதுக்கு பைஅத் செய்து கொடுக்க கட்டாயப்படுத்தப்பட்டனர்.

இரண்டு விதமான நெருக்கடிக்கு ஹுஸைன் (ரழி) ஆளாக்கப்பட்டனர். மதினாவின் கவர்னர், "நீங்கள் மக்கா போய்விடுங்கள். அது பாதுகாக்கப்பட்ட நகரம்" என்கிறார். யஸீதின் பிடியில் உள்ள கூஃபா மக்களோ, "போராட வாருங்கள். நாங்கள் உங்கள் பக்கம் இருக்கிறோம்" என கடிதங்கள் அனுப்பினர். தன் உயிரைப் பாதுகாப்பதை விட, மக்களின் சுதந்தரத்தை உறுதி செய்வதற்கும், இஸ்லாமிய அரச மரபையும் நிலைநாட்ட கூஃபா நோக்கிய ஹுஸைன் (ரழி) மற்றும் அவர்களின் குடும்பத்தினர் 70 பேர் புறப்பட்டனர்.

வழியில் 200 பேர் "ஹுஸைனே! உங்களுக்குத் துணையாக நாங்களும் ஆயுதங்களுடன் வருகிறோம்" என்றதும், "என்னருமை மக்களே! நீங்கள் நபிகள் நாயகம் (ஸல்) காலத்தை மனதில் கொண்டு, 'நாம் வென்றுவிடுவோம். நிறைய பரிசுப்பொருள் கிடைக்கும்' என்று நம்பி வருகிறீர்கள். ஆனால் நான் செல்வது மரணத்தை உறுதியாக நம்பிச் செல்லும் போராட்டம். விரும்பியவர்கள் வரலாம். ஆனால் நான் அதை விரும்பவில்லை" என தெளிவுபடுத்தியதும் அவர்கள் விலகி விட்டனர்.

**இஸ்லாமிய ஜனநாயகம் மலர்ந்தது**

கர்பலா என்ற இடத்தில் ஷிம்ர் என்ற யஸீதின் தலைமையில் வந்த வீரர்கள், "அங்கேயே யஸீதை ஏற்பதாக உறுதி செய்ய வேண்டும். அல்லது சாக வேண்டும்" என பயமுறுத்தி சண்டைக்கு அழைக்க, அங்கேயே போர் மூண்டு பலநாட்கள் ஹுஸைனின் கடைசி வீரர் வரை பலிகொடுத்து, ஹுஸைன் (ரழி) அவர்களும் இறுதி 3 நாள் தன்னந்தனியாகப் போராடி உடலெல்லாம் சல்லடையாக்கப்பட்டு விழுந்தார்கள். சர்வாதிகாரம் மரணித்து இஸ்லாமிய ஜனநாயகம் மலர்ந்தது.

ஹுஸைன் (ரழி) அவர்களுக்கு பதவி ஆசை இருந்தால், வழியில் வந்த போர் வீரர்களை தன் துணைக்கு வைத்துக் கொண்டிருக்க முடியும். அவர்கள், "இது பதவி வெறி பிடித்தவனுக்கும் அதை விரும்பாதவர்களுக்குமான போர்" என உணர்ந்ததாலேயே தன் குடும்பத்தைத் தவிர யாரையும் அழைத்து வரவில்லை. போராட்டவாதிகள் சொற்பமாகவே வாழ்கிறார்கள். போராடுகிறார்கள். அவர்கள் விளைவிக்கும் பலன், இன்றும் சர்வாதிகாரிகளை முகம் காட்டாது மறைந்தே இருக்கும் நெருக்கடிக்கு ஆளாக்குவதை இன்றைய காலம் வரை யாரும் மறுக்க முடியாது.

கட்டுரையாளர்: 'நுக்தா' ஆசிரியர், திருநெல்வேலி, பேட்டை.

முதல்வர் தனிப்பிரிவில் மனு அளித்தால் வீடு கிடைப்பதாக பரவிய

# வதந்தியால் தலைமைச் செயலகத்தில் கூடிய மக்கள்

● காவல்துறையினர் தடுத்ததால் பரபரப்பு

■ சென்னை

முதல்வர் தனிப்பிரிவில் மனு அளித்தால் வீடு கிடைக்கும் என்று வதந்தி பரவியதையடுத்து, தலைமைச் செயலகத்தில் மனு அளிப்பதற்காக கூடிய பொதுமக்களை காவல் துறையினர் தடுத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின்போது, முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களிடம் பெற்ற மனுக்களின் அடிப்படையில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற துறை உருவாக்கப்பட்டுள்ளது. மனுக்களை பிரித்து துறைவாரியாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதில் பொதுமக்களுக்கு பல்வேறு திட்டங்களின்கீழ் வீடுகள் ஒதுக்கீடு, கட்டித்தருதல் போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மனுக்களுக்கு உடனடி தீர்வு கிடைத்து வருவதால், சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வர் தனிப்பிரிவில் நாள்தோறும் மனுக்களை அளிக்கும் பொதுமக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. குறிப்பாக திங்கள், செவ்வாய் என வார முதல் நாட்களில் அதிகளவு கூட்டம் இருக்கும். காவல் துறையினர் அவர்களை ஒழுங்குபடுத்தி, மனுக்களை கொடுத்துச் செல்ல உதவுவார்கள். இந்நிலையில், கடந்த இரு தினங்களாக தலைமைச் செயலகத்துக்கு வீடு ஒதுக்கீடு கேட்டு அதிகளவில் மனுக்கள் வருவதாக கூறப்படுகிறது.



▲ சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வர் தனிப்பிரிவில் மனு கொடுப்பதற்காக நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்த பொதுமக்கள். படம்: க.ஸ்ரீபரத்

முதல்வர் தனிப்பிரிவில் மனு அளித்தால், குடியிருப்புகள் ஒதுக்கப்படும் என்று வெளியான வதந்தியை நம்பி, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் நேற்று தலைமைச் செயலகத்தில் மனுக்களுடன் குவிந்தனர். சட்டப்பேரவை கூட்டம் கலைவாணர் அரங்கில் நடைபெற்று வரும் சூழலில், பாதுகாப்புக்கு நின்றிருந்த காவல்துறையினர் அவர்களை தடுத்து, குறிப்பிட்ட அளவு பொதுமக்களை மட்டுமே உள்ளே அனுப்பினர்.

இதனால் நுழைவுவாயிலில் காவல் துறையினர் சோதனை செய்யும் பகுதியில், பொதுமக்கள் கூட்டம் அதிகரித்தது. நீண்டதூரம் நடைபாதையில் காத்திருந்த பெண்கள், அங்கிருந்த தடுப்புகளை தாண்டி வெளியில் வர முயற்சித்ததுடன், காவல்துறையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். கூட்டம் தொடர்ந்து அதிகரித்த நிலையில், அப்பகுதியில் காவல்துறையினர், பொதுமக்கள் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இதற்கிடையில், கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டிருந்த கம்பம் உடைந்து விழுந்ததில், அப்பகுதியில் நின்றிருந்த மூதாட்டி ஒருவர் காயமடைந்தார். இந்நிலையில், கரோனா தொற்று பரவலை தடுக்க நடவடிக்கை எடுக்கும் அரசு, சமூக இடைவெளியை பின்பற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்கிருந்தவர்கள் குற்றம் சாட்டினர்.

'முதல்வர் தனிப்பிரிவில் மனு அளித்தால் வீடு கிடைக்கும் என்று தகவல் பரப்பியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல் துறையினரும் பொதுமக்களிடம் நிலைமையை புரியவைத்து, அவர்களை பொறுமையாக கையாள அதிகாரிகள் உத்தரவிட வேண்டும்' என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.






▲ கட்டாயக்கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடஒதுக்கீட்டு சேர்க்கைக்கு விண்ணப்பித்த சிறுவர்களுக்கான குலுக்கல் தேர்வு, மாநிலம் முழுவதும் நேற்று நடைபெற்றது. அதன்படி சென்னை மாவட்ட பள்ளிகளுக்கான மாணவர்கள் தேர்வு ராயப்பேட்டை வி.எம்.தெருவில் உள்ள தனியார் பள்ளியில் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி மார்ஸ் தலைமையில் நடைபெற்றது. படம்: பு.க.பிரவீன்

80 ரயில் நிலையங்களில் மீண்டும்

# தானியங்கி டிக்கெட் வழங்கும் இயந்திரங்கள்

■ சென்னை

கூட்ட நெரிசலைத் தடுக்கும் வகையில் 80 ரயில் நிலையங்களில் மீண்டும் தானியங்கி டிக்கெட் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்படும் என்று தெற்கு ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கரோனா ஊரடங்கு தளர்வுக்குப் பிறகு பயணிகளின் தேவைக்கு ஏற்றார்போல், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு 550-க்கும் மேற்பட்ட மின்சார ரயில்கள் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ரயில் நிலையங்களில் ஏற்கெனவே இருந்த தானியங்கி டிக்கெட் வழங்கும் இயந்திரங்கள் செயல்படாமல் இருக்கின்றன. இதனால், கவுன்ட்டர்களில் பயணிகள் டிக்கெட் எடுக்க நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது என்று பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெற்கு ரயில்வே அதிகாரிகளிடம் கேட்டபோது, 'கரோனா பாதிப்பால் நீண்ட நாட்களாக தானியங்கி டிக்கெட் இயந்திரங்கள் முடங்கியிருந்து பழுதாகி இருக்கின்றன.

இந்நிலையில் சென்னை சென்ட்ரல், எழும்பூர் உட்பட 80 ரயில் நிலையங்களில் தானியங்கி இயந்திரங்கள் மூலம் மீண்டும் டிக்கெட் விநியோகம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. படிப்படியாக இந்த சேவை தொடங்கப்படும்'' என்றனர்.

குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளின் தரம் குறித்து

# ஐஐடி, அண்ணா பல்கலை. மூலம் ஆய்வு

● தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை என அமைச்சர் உறுதி

■ சென்னை

தமிழக குடிசை மாற்று வாரியம் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் தரம் குறித்து சென்னை ஐஐடி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் ஆய்வு செய்யப்படும். தவறு செய்தவர்கள் மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

சென்னை புளியந்தோப்பு, கே.பி. பூங்கா பகுதியில் குடிசைமாற்று வாரிய குடியிருப்பில் சுவரின் மேல் பூச்சு இடிந்து விழுந்த விவகாரம் தொடர்பாக, சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், சட்டப்பேரவையில் எழும்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் இ.பரந்தாமன், நேற்று சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். அப்போது அவர் பேசியதாவது:

புளியந்தோப்பில் கட்டப்பட்டுள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்பின் முதல் திட்டத்தில் 864 வீடுகள், ரூ.112.26 கோடியில் தாங்குதளம் மற்றும் 9 தளங்களுடன் 4 பிளாக்குகளாகக் கட்டப்பட்டுள்ளன. இக்கட்டிடங்கள் 2018 ஜனவரியில் தொடங்கி, 2019 மே மாதத்துக்குள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

▼ மழை வந்ததால், அருகில் தற்காலிக குடிசைகளில் வசித்தவர்கள் அக்கட்டிடத்தில் தாங்களாகவே வந்து குடியேறிவிட்டனர்.

அதேபோல், அடுத்த திட்டத்தில் 1,056 வீடுகள், ரூ.139.13 கோடி மதிப்பீட்டில், 4 பிளாக்குகளாக கட்டப்பட்டுள்ளன. இதில் முதல் 2 பிளாக்குகள் 2018 ஆகஸ்ட் மாதத்திலும், இரண்டாவது 2 பிளாக் பணிகள் 2019 பிப்ரவரியிலும் தொடங்கப்பட்டு, 2020 ஆகஸ்ட்டில் முடிக்கப்பட்டுள்ளன. உரிய கால அவகாசம் வழங்கப்படாமல் மிக விரைவாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதில், தற்போது சுவர் பூச்சுகள் தொட்டால் உதிர்கின்றன. கட்டிடத்தின் உறுதித்தன்மையை ஆய்வு செய்ய வேண்டும். கடந்த 10 ஆண்டு அதிமுக ஆட்சியில் கட்டப்பட்ட கட்டிடங்கள், தொடர்புடைய கட்டுமான நிறுவனம் கட்டிய அரசு கட்டிடங்கள் குறித்து ஆய்வு செய்து, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, துறைக்கு அமைச்சராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கு பதில் அளித்து ஊரக தொழில்துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேசியதாவது:

புளியந்தோப்பு கேசவ பெருமாள் பூங்கா அருகில், கடந்த 1977-78-ம் ஆண்டில் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட கட்டிடம் பழுதடைந்ததால், அங்கு 864 குடியிருப்புகள் கொண்ட புதிய கட்டிடத்துக்கான கட்டுமானப் பணி 2018-ல் தொடங்கப்பட்டு, 2019-ல் முடிக்கப்பட்டுள்ளது. கடந்த 2020 மே முதல், இந்த ஆண்டு மார்ச் மாதம் வரை இந்த கட்டிடம் கரோனா சிகிச்சை மையமாக இருந்துள்ளது. இங்கு குடிநீர், கழிவுநீர் குழாய்கள், மின்தூக்கிகள் பழுதாக்கப்பட்டுள்ளன. எனவே, இவற்றை சீரமைக்க உத்தரவிடப்பட்டு, விரைவில் பொதுமக்களுக்கு வழங்க அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதற்கிடையில் மழை வந்ததால், அருகில் தற்காலிக குடிசைகளில் வசித்தவர்கள் அக்கட்டிடத்தில் தாங்களாவே குடியேறிவிட்டனர். கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை குறித்து ஆய்வு செய்ய ஐஐடிக்கு கடிதம் அளிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை கிடைத்ததும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இதேபோல் தமிழகம் முழுவதும் கடந்த 10 ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து சென்னை ஐஐடி, அண்ணா பல்கலைக்கழகம் மூலம் ஆய்வு செய்யப்படும். யார் தவறு செய்தாலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்.

## பிஎச்.டி., எம்.பில். படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

■ சென்னை

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் 2021-22-ம் கல்வியாண்டின் எம்.பில்., பிஎச்.டி. (முழு நேர, பகுதிநேர) படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. எனவே, தகுதியுள்ள மாணவர்கள் www.tnteu.ac.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்யலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பத்தை உரிய சான்றிதழ் நகல்களுடன், 'பதிவாளர், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம், கங்கை அம்மன் கோயில் தெரு, காரப்பாக்கம், சென்னை 600097' என்ற முகவரிக்கு, வரும் செப்டம்பர் 15-ம் தேதிக்குள் அனுப்பிவைக்க வேண்டும்.மாணவர் சேர்க்கைக்கான தகுதிகள் உட்பட கூடுதல் விவரங்களை www.tnteu.ac.in என்ற இணையத்தில் அறியலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தலைநிமிரும் தமிழகம் - நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்'

# தமிழரசு இதழின் சிறப்பு மலரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

■ சென்னை

'தலைநிமிரும் தமிழகம் - நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்' என்ற தமிழரசு இதழின் சிறப்பு மலரை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு பொறுப்பேற்று 100 நாட்களில் ஆற்றிய மக்கள் நலப் பணிகளைத் தொகுத்து, செய்தித் துறையின் சார்பில், 'தலைநிமிரும் தமிழகம் - நூற்றாண்டின் திசையில் நூறு நாட்கள்' என்ற தமிழரசு இதழின் சிறப்பு வெளியீட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை வெளியிட்டார். முதல் பிரதியை தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு பெற்றுக்கொண்டார்.

இச்சிறப்பு மலரில், முதல்வர் அறிவித்த நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் நலத் திட்டங்கள், மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மேற்கொண்ட களப் பணிகள், ஆய்வுப் பணிகள் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட துறை வாரியான ஆய்வுகள், முக்கிய நிகழ்வுகளின் உரைகளின் தொகுப்புகள் ஆகியவற்றுடன், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' துறை தொடர்பான செய்திகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளின் புகைப்படங்கள் மற்றும் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இந்த வெளியீட்டு நிகழ்ச்சியில் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலர் மகேசன் காசிராஜன், செய்தித்துறை இயக்குநர் வீ.ப.ஜெயசீலன் மற்றும் செய்தித் துறையின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம். **மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in**

ஜி.கே.மூப்பனார் 90-வது பிறந்த நாள்

# தமாகா, காங்கிரஸ் தலைவர்கள் மரியாதை

■ சென்னை


தமாகா நிறுவனரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ஜி.கே.மூப்பனாரின் 90-வது பிறந்த நாளையொட்டி நேற்று அவரது படத்துக்கு தமாகா, காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

சென்னையில் உள்ள தமாகா அலுவலகத்தில் ஜி.கே.மூப்பனார் படத்துக்கு அக்கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன், மாநில நிர்வாகிகள் சக்திவடிவேல், ஜி.ஆர். வெங்கடேஷ் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். மயிலாப்பூரில் 90 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை ஜி.கே.வாசன் தொடங்கி வைத்தார்.



▲ ஜி.கே.மூப்பனாரின் 90-வது பிறந்தநாளையொட்டி, சென்னை மயிலாப்பூர் நாகேஸ்வர பூங்கா அருகில் நேற்று நடைபெற்ற விழாவில், தமாகா தலைவர் ஜி.கே.வாசன் பங்கேற்று மரக்கன்றுகளை வழங்கினார்.

தமிழக காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனில் விடுதலைப் போராட்ட வீரர் சத்தியமூர்த்தியின் 144-வது பிறந்த நாள் மற்றும் ஜி.கே.மூப்பனாரின் 90-வது பிறந்த நாளையொட்டி அவர்களது படங்களுக்கு தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் கே.வீ.தங்கபாலு, ஊடகப் பிரிவு மாநிலத் தலைவர் ஆ.கோபண்ணா, மத்திய சென்னை கிழக்கு மாவட்டத் தலைவர் சிவ ராஜசேகரன் உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.






பொன்மொழி: மரம் தனக்காகப் பழுப்பதில்லை; ஆறு தனக்காக ஓடுவதில்லை; சான்றோர் தமக்காக வாழ்வதில்லை. - குருநானக்

இணையம்: கருவுறுதல் பிரச்சினைகளுக்கு சிகிச்சை வழங்கும் பிரசாந்த் ஃபேர்டிலிட்டி ஆராய்ச்சி மையத்தின் https://pfrcivf.com/ இணையதளத்தில், அங்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன. மேலும், தாய்மை சார்ந்த பல்வேறு தகவல்களும் இடம்பெற்றுள்ளன.

பொதுஅறிவு: நிதி ஆயோக் அறிக்கையின்படி, டெல்லி உள்ளிட்ட பல நகரங்கள் கடும் தண்ணீர்ப் பற்றாக்குறையில் சிக்கியுள்ளன. 122 நாடுகளை உள்ளடக்கிய உலகளாவிய நீர்தரக் குறியீட்டில் இந்தியா 120–ம் இடத்தில் உள்ளது. இந்தியாவில் 84 சதவீத வீடுகளுக்கு குழாய் மூலம் தண்ணீர் கிடைப்பதில்லை.

மரவள்ளியில் மாவுப்பூச்சி தாக்குதல்

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரம் இழப்பீடு

● வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேரவையில் அறிவிப்பு

■ சென்னை

மரவள்ளிப் பயிரில் மாவுப்பூச்சி தாக்குதலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரம் வழங்கப்படும் என்று பேரவையில் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று வேளாண் துறை நிதிநிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு பதில் அளித்து, வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பேசியதாவது:

வாழை விவசாயிகளுக்கு ரூ.3 கோடி ஊக்கத்தொகை வழங்கப்படும். தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், திசு வளர்ப்புக் கூடம் ரூ.2.50 கோடியில் அமைக்கப்படுகிறது. வாழைத்தார்களில் கருப்புப் புள்ளி வரக்கூடாது என்பதற்காக, 1,000 ஹெக்டேர் பரப்புக்கு ரூ.1.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில் வாழை பழத்தை பதப்படுத்தும் மையம் அமைக்கப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் பாரம்பரிய ரகமான மட்டி வாழைப் பழத்துக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை எடுக்கப்படும். குடிமராமத்து என்று கூறி, பனை மரங்களை அழித்துவிட்டார்கள். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

அப்போது பேரவைத் தலைவர் அப்பாவு, "பனை விதைகள் தருவதாகச் சொல்லியுள்ளீர்கள். நான் ஆண்டுதோறும் ஒரு லட்சம் பனை விதைகளை உங்கள் துறைக்கு வழங்குகிறேன்" என்றார்.

மீண்டும் வேளாண் அமைச்சர் எம்ஆர்கே.பன்னீர்செல்வம் பேசும்போது, "நாமக்கல், கள்ளக்குறிச்சி, தருமபுரி, சேலம், கடலூர், ஈரோடு, திருவண்ணாமலை, கரூர், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களில் மாவுப்பூச்சி தாக்குதலின் தீவிரத்தைக் கருத்தில்கொண்டு, விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.2 ஆயிரம் வீதம் வழங்கப்படும்.

மாவுப்பூச்சி பாதிக்கப்பட்ட இடங்களில் 8,945 ஹெக்டேருக்கு ரூ.1.78 கோடி நிதி, மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும்.

கடந்த ஆண்டு குறுவைப்பருவத்தில் காப்பீட்டுக் கட்டணமாக ரூ.152 கோடி பிரிமியம் செலுத்தப்பட்டுள்ளது. மாநில அரசின் கட்டணமாக ரூ.20 கோடி, காப்பீடு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை இழப்பீட்டுத்தொகையாக 34 மாவட்டங்களைச் சேர்ந்த 1.65 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.107 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மீதிமுள்ள திருவாரூர், நாகை, மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு இன்னும் 10 நாட்களில் வழங்கப்படும். கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் காப்பீட்டுக் கட்டணமாக ரூ.2,500 கோடி பிரிமியம் கணக்கிடப்பட்டுள்ளது. மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.1,550 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்ட மானியத் தொகையைவிட அதிகமாகும். மத்திய அரசின் காப்பீட்டுக் கட்டண மானியம் பெறப்பட்டவுடன், விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

2020-21-ம் ஆண்டு சம்பா பருவத்தில் இழப்பீட்டுத் தொகை ரூ.2 ஆயிரம் கோடி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிலக்கடலை, துவரை, உளுந்து, பாசிப்பயறு, நெல், கம்பு, சோளம், ராகி, பருத்தி, சாமை, கொள்ளு, மக்காச்சோளம் ஆகிய பயிர்களுக்கு விவசாயிகள் ஆகஸ்ட் 31-ம் தேதி வரை காப்பீடு செய்யலாம். மேலும், வாழை, மரவள்ளி, வெங்காயம், மஞ்சள், இஞ்சி, உருளைக்கிழங்க, பூண்டு, காரட், தக்காளி, சிவப்பு மிளகாய், தக்காளி, வெண்டை, கத்தரிக்காய், முட்டைக்கோஸ் ஆகிய தோட்டக்கலைப் பயிர்களுக்கும் விவசாயிகள் காப்பீடு செய்யலாம்.

### கரும்பு நிலுவைத் தொகை

பொதுத்துறை மற்றும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு நிலைவைத் தொகையை, உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அரசு சார்பில் ரூ.182 கோடி வழிவகைக் கடன் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

ஆக.23 முதல் 27-ம் தேதிவரை

# எம்எல்ஏக்களுக்கு புத்தாக்கம், கணினிவழிப் பயிற்சி

● சட்டப்பேரவைத் தலைவர் அறிவிப்பு

■ சென்னை

எம்எல்ஏக்களுக்கு ஆக.23, 24-ம் தேதிகளில் புத்தாக்கப் பயிற்சியும், 25-ம் தேதி முதல் 27 வரை கணினி வழிப்பயிற்சியும் அளிக்கப்படும் என்று பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில், பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:

சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி வரும் 23, 24-ம் தேதிகளில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம் எம்எல்ஏ விடுதியில் 10-வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெறும். மேலும், அனைத்து உறுப்பினர்களுக்கும் கணினி வழிப்பயிற்சி வரும் 25-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை தினமும் மாலை 4 மணி முதல் 5 மணி வரை தற்போது பேரவைக் கூட்டம் நடைபெறும் இந்தக் கூட்டரங்கில் அளிக்கப்படும். இப்பயிற்சியில் அனைத்து எம்எல்ஏக்களும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும். பேரவை மீண்டும் வரும் 23-ம் தேதி கூடும்.

இவ்வாறு பேரவைத் தலைவர் அறிவித்தார்.

▼ சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டம் எம்எல்ஏ விடுதியில் 10-வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெறும்.



▲ தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி. உடன், துணை ஒருங்கிணைப்பாளர்கள் கே.பி.முனுசாமி, ஆர்.வைத்திலிங்கம், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, பி.தங்கமணி, டி.ஜெயக்குமார், சிவி.சண்முகம் உள்ளிட்டோர். படம்: பு.க.பிரவீன்

ஆதிதிராவிட, பழங்குடியின மக்களின்

# பொருளாதார முன்னேற்றத்துக்கு அரசு துணையாக இருக்கும்

● உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உறுதி

■ சென்னை

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு தமிழக அரசு எப்போதும் துணையாக இருக்கும் என்று முதல்வர் ஸ்டாலின் உறுதியளித்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில், மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: ஒடுக்கப்பட்ட, ஏழை மக்களுக்கான திமுக அரசு, ஆதிதிராவிடர், பட்டியலினத்தவர், பழங்குடியினர் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பில் உரிய இடங்களைப் பெற வேண்டும். சமூக அமைப்பில் எந்தச் சூழலிலும் புறக்கணிக்கப்படக் கூடாது. சாதியைக் காரணம் காட்டி, அவர்களது வளர்ச்சி தடுக்கப்படக் கூடாது. அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகிய அனைத்திலும் அவர்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற சிந்தனைகளுடன் திமுக அரசு செயல்பட்டு வருகிறது.

இந்த இலக்கை அடைவதற்கான தொலைவு, ஒவ்வொரு நாளும் குறைந்துவர வேண்டும். அதற்கு அரசுடன் அனைவரும் இணைந்து உழைக்க வேண்டும். இத்தகைய சூழலில், அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்கக்கூடிய தீண்டாமைச் சம்பவங்களைக் கேள்விப்படும்போது, வருத்தம், ஆத்திரம், கோபம் வருகிறது.

கல்வி, பொருளாதாரம், நாகரிகம் வளர்ந்தாலும், சாதி, தீண்டாமை, ஏற்றத்தாழ்வுகள் அப்படியே தான் இருக்கின்றன. அதில் மாற்றம் ஏற்பட, இன்னும் பல ஆண்டுகளைக் கடக்க வேண்டும் என்றே தெரிகிறது. இதை சட்டத்தின் மூலம் ஓரளவு சரிசெய்ய முடியும். இதற்கான சட்டங்கள், முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

### சட்டமீறல்களை தடுக்க வேண்டும்

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் ஆகிய சட்டங்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு எதிரான தீண்டாமை வன்கொடுமைகளைத் தடுக்க நிறைவேற்றப்பட்டன. அரசியலமைப்பு சட்டப்படி தீண்டாமை தடை செய்யப்பட்டுள்ளது. ஆனாலும், சிலர் அதை தைரியமாகவே செய்கிறார்கள். இத்தகைய சட்டமீறல்கள் தடுக்கப்படுவதுடன், சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். தீண்டாமைக் குற்றம் இழைத்தவர் தப்பிவிடக்கூடாது; அதே நேரம் தவறாகவும் பயன்படுத்தக்கூடாது.

அரசு பொறுப்பேற்றதும், மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுவைத் திருத்தி அமைத்துள்ளோம்.

தமிழகத்தின் மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்காக ரூ.3,588.87 கோடியும், பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக ரூ.543.42 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் ரூ.14,696.60 கோடியும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ரூ.1306 கோடியும் ஒதுக்கப்பட்டு, பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

விடுதிகள் மேம்பாட்டுக்கு ரூ.25 கோடி, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.123 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காலி பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வியல் பொருளாதார முன்னேற்றத்துக்கு திமுக அரசு எப்போதும் துணையாக இருக்கும். இவ்வாறு முதல்வர் பேசினார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்ந்து வாய்தா கேட்டதால்

# ராஜேந்திர பாலாஜிக்கு நீதிபதி கண்டனம்

■ சென்னை

சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்ந்து வாய்தா கேட்டதால், முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு சென்னை உயர் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

2011 முதல் 2013 வரை வருமானத்துக்கு அதிகமாக, ரூ.7 கோடிக்கும் மேற்பட்ட சொத்துக் குவிப்பில் ஈடுபட்டதாக முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீது புகார் தெரிவித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிடுமாறு மதுரை தல்லாகுளத்தைச் சேர்ந்த மகேந்திரன், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் எம்.சத்தியநாராயணன், ஆர்.ஹேமலதா ஆகியோர் அடங்கிய அமர்வு, கடந்த ஏப்ரல் 3-ம் தேதி மாறுபட்ட தீர்ப்பை அளித்தனர்.

சொத்துக் குவிப்பு புகார் தொடர்பாக அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீது லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்துமாறு நீதிபதி எம்.சத்தியநாராயணன் உத்தரவிட்டார். ஆனால், நீண்ட இடைவெளிக்குப் பிறகு வழக்கு பதிவு செய்து விசாரிப்பதால் எந்தப் பலனும் இல்லை என்று கூறி, வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதி ஆர்.ஹேமலதா உத்தரவிட்டார்.

இதையடுத்து, இந்த வழக்கு விசாரணை மூன்றாவது நீதிபதியான எம்.நிர்மல்குமார் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, உயர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருப்பதால், வழக்கு விசாரணையை தள்ளிவைக்க வேண்டுமென ராஜேந்திர பாலாஜி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த மாநில அரசு தலைமைக் குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா, இந்த வழக்கு விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்துடன், பிழைகள் கொண்ட மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, தொடர்ந்து வாய்தா கேட்டு வருகின்றனர். அந்த மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு பட்டியலிடப்படவில்லை. எனவே இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வாதிட்டார்.

இதையடுத்து, ராஜேந்திர பாலாஜி தரப்புக்கு கடும் கண்டனம் தெரிவித்த நீதிபதி, இந்த வழக்கில் மேற்கொண்டு வாய்தா கேட்கக்கூடாது என்று தெரிவித்தார். மேலும் மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுக்காவிட்டால், இந்த வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்படும் என்று கூறி, வழக்கு விசாரணையை வரும் செப்.1-ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

## வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் போட்டியின்றித் தேர்வு

■ சென்னை

தமிழ்நாடு வக்ஃப் வாரிய தேர்தல் அதிகாரி மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களுக்கான தேர்தலில் மாநில சட்டப்பேரவை முஸ்லிம் உறுப்பினர்கள் பிரிவில் 2 காலியிடங்களுக்கான தேர்தல் அட்டவணை கடந்த 11-ம் தேதி வெளியிடப்பட்டது. அப்பதவிகளுக்காக ப.அப்துல் சமது மற்றும் ஜெ. முகமது ஷாநவாஸ் ஆகிய 2 எம்எல்ஏக்கள் வேட்பு மனு தாக்கல் செய்தனர். 2 காலியிடங்களுக்கு 2 பேர் மட்டுமே போட்டியிடுவதால், 1997-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய (உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்துதல்) விதிகள் 9(6)–ன் படி இவர்கள் 2 பேரும் தமிழ்நாடு வக்ஃப் வாரிய உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.


# ஜோயாலுக்காஸ் ஷோரூம்களில் திருமண நகைகளின் திருவிழா

● சேதாரத்தில் 30 சதவீதம் தள்ளுபடி

■ சென்னை

ஜோயாலுக்காஸ் ஷோரூம்களில் திருமண நகைகளின் திருவிழா (பிரைடல் ஃபெஸ்ட்) மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இதில் வாடிக்கையாளர்கள் வாங்கும் அனைத்து நகைகளுக் கும், சேதாரத்தில் 30 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும். மேலும், நகைகளுக்கு செய்கூலி இல்லை.

டிரெண்டியான திருமண நகைகள் முதல் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் நகைகள் வரை அனைத்தும், ஆச்சரியமூட்டும் சலுகைகளுடன் கிடைக்கும்.

இதுகுறித்து ஜோயாலுக்காஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஜோய் ஆலுக்காஸ் கூறும்போது, "திருமணகாலம் தொடங்கும் இந்நேரத்தில், தங்கம் விலையை கருத்தில்கொண்டு இந்த சலுகையை அளிக்கிறோம். அனைத்து விதமான நகைகளிலும் புத்தம் புதிய டிசைன்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது எங்கள் வாடிக்கையாளர்களுக்கு மிகச்சிறந்த கொண்டாட்டமாக அமைவது உறுதி" என்றார்.

கரோனா வழிகாட்டுதல்களை கடைப்பிடித்து, வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான ஷாப்பிங் அனுபவத்தை ஜோயாலுக்காஸ் உறுதிசெய்கிறது என்று ஜோயாலுக்காஸ் நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தமிழகத்தில் அனைத்து இடங்களிலும்

# போதை இல்லாத பதநீரை விற்பனை செய்ய வேண்டும்

● சட்டப்பேரவையில் பாமக உறுப்பினர் ஜி.கே.மணி வலியுறுத்தல்

■ சென்னை

பள்ளி, கல்லூரி என எல்லா இடங்களிலும் பதநீர் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக உறுப்பினர் ஜி.கே.மணி வலியுறுத்தினார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று பொது மற்றும் வேளாண் நிதி நிலை அறிக்கைகள் மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து நிதி அமைச்சரும், வேளாண் துறை அமைச்சரும் பேசினர். அதற்கு நன்றி தெரிவித்தும், கோரிக்கைகளை முன்வைத்தும் உறுப்பினர்கள் பேசியதாவது:

**செந்தில்குமார் (திமுக):** சித்தர்களின் ஜீவ சமாதிகளை புனரமைக்க, மேம்படுத்திட புதிய திட்டத்தை முதல்வர் அறிமுகம் செய்ய வேண்டும்.

**மார்க்கண்டேயன் (திமுக):** மானாவாரி பயிர்களுக்கு காப்பீட்டுத் திட்டம் மூலம் இழப்பீடு வழங்க வேண்டும்.

**பிரின்ஸ் (காங்கிரஸ்):** ரப்பர் மரத்தை தோட்டக்கலைத் துறை பயிருடன் கொண்டு வர வேண்டும். கேரளாவைப் போல ரப்பருக்கு அரசே விலையை நிர்ணயிக்க வேண்டும்.

**தி.வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி):** பண்ருட்டி, கன்னியாகுமரி உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு முந்திரியை விவசாயிகள் எடுத்து வரும்போது வணிகவரித் துறை அதிகாரிகள் வரி விதிக்கின்றனர். அதனால் விவசாயிகள் பெரிதும் அவதிப்படுகின்றனர். வரிவிதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**ஜி.கே.மணி (பாமக):** பனைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கிறது. அதனால் பனை ஏறுவதற்கான கருவிகளை வழங்கி பனைத் தொழிலை ஊக்கப்படுத்த வேண்டும். பனை, தென்னையில் இருந்து இறக்கப்பட்ட போதை இல்லாத பதநீரை பள்ளி, கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**பேரவைத் தலைவர்:** பதநீரை 12 மணி நேரம் வைத்தால் கள்ளாக மாறிவிடும்.

**ஜி.கே.மணி:** பதநீரைப் பதப்படுத்தி விற்பனை செய்யவும், ஏற்றுமதி செய்யவும் ஆவன செய்ய வேண்டும்.

**வேளாண் அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம்:** பனை ஏறும் கருவிகள் வழங்க முதல்வர் அனுமதி அளித்துள்ளார். 'நீரா பானம்' தயாரிக்க யார் முன்வந்தாலும் அரசு உதவத் தயாராக இருக்கிறது.

**செல்வபெருந்தகை (காங்கிரஸ்):** கருணாநிதி பெயரால் மண் உரிமைத் திட்டம் தொடங்க வேண்டும். ஏனென்றால், இந்திரா காந்தி கொண்டு வந்த நில உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட இடங்கள் ஏழைகளுக்கு வழங்கப்பட்டு, அங்கு அவர்கள் 60 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வருகின்றனர். இந்த குடியிருப்பு மனைகளில் சட்டச் சிக்கல் இருக்கிறது. இதற்குத் தீர்வு கண்டு, மண் உரிமைத் திட்டம் அறிவிக்க வேண்டும். நாட்டுப்புறக் கலைகளின் நலனைக் கருத்தில் கொண்டு கூத்துப் பட்டறை உருவாக்க வேண்டும்.

**வானதி சீனிவாசன் (பாஜக):** கரும்பு விவசாயிகளுக்கான தொகையை இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாமல் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்த வேண்டும்.

**பேரவைத் தலைவர்:** விவசாயிகள் வங்கிக் கணக்கில் ரூ.2 ஆயிரம் செலுத்தியதில்தான் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அமைச்சர் கூறினார்.

**வானதி சீனிவாசன்:** இது போன்ற நடைமுறையில் முறைகேடுகள் நடைபெற்றிருந்தால் அதைக் களையத்தான் வேண்டும். அதேநேரம் நாம் டிஜிட்டலை நோக்கி செல்வது முக்கியம் என்பதால் குறிப்பிடுகிறேன். வேளாண் நிதி நிலை அறிக்கை பத்தி 57-ல் மின்னணு ஏலம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. விளைபொருளுக்கு அதிக விலை கிடைக்கச் செய்வதுதான் விவசாயத்தில் அவர்களை நீடிக்கச் செய்யும். ஏற்கெனவே e-nam என்ற மத்திய அரசின் திட்டம் இருக்கிறது. அந்த திட்டத்துடன் இந்த திட்டத்தை இணைத்து, விவசாயிகளுக்கு ஆன்ட்ராய்டு செல்போன் வழங்கி அவர்களை மார்க்கெட்டிங் செய்ய வைக்க முடியும். இதை வேளாண் துறை அமைச்சர் ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

மேலும், திமுக உறுப்பினர்கள் டாக்டர் எழிலன், கிருஷ்ணசாமி, டி.ஆர்.பி.ராஜா மற்றும் ஈஸ்வரன் (கொமதேக) ஆகியோரும் இந்த விவாதத்தில் பேசினர்.

# தமிழகம் பொருளாதாரத்தில் வீழ்ந்ததுபோன்ற மாயத்தோற்றத்தை உருவாக்கும் திமுக அரசு

● அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு

■ சென்னை

அரசியல் ஆதாயத்துக்காக தமிழகம் பொருளாதாரத்தில் வீழ்ந்தது போன்ற மாயத் தோற்றத்தை திமுக அரசு உருவாக்கி உள்ளது என்று அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: 2011-12 முதல் 2018-19 வரை நிதிப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதத்துக்கும் குறைவாகவே இருந்தது. 2019-20-ல் நிதிப் பற்றாக்குறை 3.26 சதவீதமாக இருந்தது.

ஆனால், 2016-17-க்குப் பிறகு நிதிநிலையில் பெரியசரிவு ஏற்பட்டதாகவும், அரசின் திறமையின்மையே அதற்கு காரணம் என்பது போலவும், உண்மைக்கு மாறான தோற்றத்தை வெள்ளை அறிக்கை மூலம் மக்களிடம் பதியவைக்க முயற்சிக்கின்றனர்.

2020-21ல் சுமார் ரூ.40 ஆயிரம் கோடிக்கு வருவாய் சரிந்துள்ளது. கரோனாவால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணம். இது ஓர் அசாதாரண சூழ்நிலை. எனவே, இதை வைத்து நிதி நிலைமையை கணிப்பதும், வருவாய் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை உயர்ந்துவிட்டது என அச்சத்தை ஏற்படுத்துவதும் பொருத்தமாக இருக்காது.

திமுக அரசின் திருத்திய பட்ஜெட்டிலும், கரோனாவைக் காரணம் காட்டி, வரி வருவாய், வருவாய் வரவு ஆகியவை கணிசமாக குறைக்கப்பட்டுள்ளன. அதேநேரம், வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கடன் இரட்டிப்பாவது சாதாரணமானதே. திமுக ஆட்சியிலும் அப்படித்தான் ஏற்பட்டது. ஆனாலும், அரசியல் ஆதாயத்துக்காக, இதை குடும்பக் கடனாக கணக்கிட்டு, இல்லாத பிரச்சினையை பூதாகரமாக்கி, மக்களை அச்சுறுத்தும் வகையில் வெள்ளை அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

நாட்டிலேயே தமிழகம் போல, அதிக செலவில், அதிக மக்கள் பயன்பெறும் நலத் திட்டங்கள் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை. குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிராபோல தமிழகத்திலும் மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் இருந்தால், வருவாய் உபரி, நிதி உபரி மாநிலமாக தமிழகம் இருந்திருக்கும்.

அரசியல் செய்வதற்காக, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாது என்பதை மக்களிடம் தெரிவிப்பதற்கு ஒரு முன்னோட்டமாக, இதுபோன்ற வெள்ளை அறிக்கையை வெளியிட்டு, பொருளாதாரத்தில் தமிழகம் வீழ்ச்சி அடைந்துவிட்டது போன்றும், கடன் கட்டுக்கடங்காமல் சென்றுவிட்டது போலவும் மாயத் தோற்றத்தை திமுக அரசு உருவாக்கி உள்ளது.

புதிய அரசின் முதல் பட்ஜெட்டில் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை ஒழிப்பு, வேளாண் மேம்பாடு, கல்வி, சுகாதாரக் கட்டமைப்பு, நிதி மேலாண்மை போன்றவற்றை முன்னிலைப்படுத்தி, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அத்தகைய தொலைநோக்குப் பார்வை இல்லாதது வருந்தத்தக்கது. வறுமையை ஒழிக்கும் அணுகுமுறை, வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டங்கள், சுற்றுலா மேம்பாடு என புதிய உத்தியோ, அணுகுமுறையோ இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்

# புறநகர் ஊராட்சிகளில் தூய்மைப் பணி தொடக்கம்

■ மேடவாக்கம்

சென்னை புறநகர் பகுதியில் உள்ள ஊராட்சிகளில் கடந்த 2 வாரங்களாக குப்பை சரிவர அகற்றப்படவில்லை என்ற செய்தி ‘இந்து தமிழ்’ நாளிதழில் நேற்று வெளியானது. இதையடுத்து குப்பை அகற்றும் பணி நேற்று முதல் தொடங்கியது.

சென்னை புறநகர் பகுதியில் உள்ள ஊராட்சிகளில் குப்பை கொட்ட இடம் இல்லாததாலும், ஏற்கெனவே கொட்டப்பட்டு வந்த இடத்தில் தீ விபத்து காரணமாக குப்பை கொட்ட தடை விதிக்கப்பட்டதாலும், ஊராட்சி பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து, குப்பை அகற்றும் பணி கடந்த 2 வாரங்களாக சரிவர நடைபெறவில்லை. இதனால், குப்பை ஆங்காங்கே தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதாக நேற்று ‘இந்து தமிழ்’ நாளிதழில் செய்தி வெளியானது.

இதையடுத்து புறநகர் ஊராட்சிகளில் உள்ள வீடுகளில் இருந்து குப்பை சேகரிப்பு பணிகள் நேற்று முதல் தொடங்கின.

பின்னர் சேகரிக்கப்பட்ட அனைத்து குப்பையும் செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் அருகே உள்ள கொளத்தூர் கிராமத்தில் உள்ள குப்பை கிடங்குக்கு கொண்டு செல்லப்பட்டன. குப்பையை அகற்ற செய்தி வெளியிட்டு உரிய நடவடிக்கை எடுத்த ‘இந்து தமிழ்’ நாளிதழுக்கு மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் காலாவதியான

# ஆர்.டி.பி.சி.ஆர். உபகரணம் வைத்துள்ள அறைக்கு சீல்

■ செங்கல்பட்டு

செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த ஏப்ரல் மாதம் 2020 முதல் ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை மையம் செயல்பட்டு வருகிறது.

ஆரம்ப கட்டத்தில் குறைந்த அளவு பரிசோதனைகள் செய்யப்பட்டு வந்த நிலையில், கரோனா தொற்று தாக்கம் அதிகரித்தபோது, பரிசோதனைகளும் அதிகரிக்கப்பட்டன.

இதனிடையே செங்கல்பட்டு அரசு தலைமை மருத்துவமனையில் இயங்கி வரும் ஆர்.டி.பி.சி.ஆர். ஆய்வு மையத்தில் கரோனா பரிசோதனை உபகரணங்கள் வீணாகி உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இம்மருத்துவமனையில் கரோனா பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட ரூ.64 கோடி மதிப்பிலான ஆர்.டி.பி.சி.ஆர். உபகரணங்களில் ரூ.5 கோடி அளவுக்கு காலாவதியாகி விட்டதாக கோவையைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி சி.முத்துக்குமார் வழக்கு தொடர்ந்தார்.





▲ காலாவதியான ஆர்.டி.பி.சி.ஆர். உபகரணங்கள். (அடுத்த படம்) சீல் வைக்கப்பட்ட அறைக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் ஆர்.டி.பி.சி.ஆர். உபகரணங்களை கையாண்டதில் முறைகேடுகள் நடந்துள்ளதா என ஆய்வு செய்ய தமிழ்நாடு மருத்துவத் துறை செயலாளருக்கு உத்தரவிட்டு இருந்தது. மேலும் பரிசோதனை கருவிகளை கையாளுவதில் முறைகேடுகள் இருப்பது ஆபத்து என தெரிவித்த நீதிபதிகள், உடனடி நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள நுண்ணுயிர் பிரிவில் ஆர்.டி.பி.சி.ஆர். உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ள அறையை செங்கல்பட்டு வருவாய்த் துறையினர் மற்றும் காவல் துறையினர் இணைந்து சீல் வைத்தனர். அந்த அறைக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகிகளிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காலாவதியான உபகரணங்களை மறைப்பதற்கு முயற்சி நடைபெற்றதாக நீதிமன்றத்தில் மனுதாரர் தெரிவித்ததை அடுத்து, சீல் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டதன் அடிப்படையில் சீல் வைக்கப்பட்டதாக வருவாய்த் துறையினர் தெரிவித்தனர்.

## சதுரங்கப்பட்டினம் கோட்டையில் ஆட்சியர் ஆய்வு

■ கல்பாக்கம்

கல்பாக்கம் அருகே சதுரங்கப்பட்டினத்தில் கி.பி. 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த டச்சு கோட்டை உள்ளது. இக்கோட்டையின் பல்வேறு பகுதிகள் சேதமடைந்த நிலையில் உள்ளன. தொல்லியல் துறை, கோட்டையை நினைவுச் சின்னமாக பராமரித்து பாதுகாத்து வருகிறது. இந்நிலையில், மத்திய பொதுத் துறை நிறுவனங்களின் சமூக பொறுப்பு திட்டத்தின்கீழ், சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்த தொல்லியல்துறை பரிசீலித்து வந்தது.

இந்நிலையில், செங்கல்பட்டு ஆட்சியர் ராகுல்நாத் கோட்டையில் மேம்பாட்டுப் பணிகள் குறித்து நேற்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது கோட்டை வளாகம், பூந்தோட்டம், அலங்கார மின்விளக்குகள், சுற்றுலாப் பயணிகளுக்கு குடிநீர், கழிப்பறை, இளைப்பாறுவதற்கான இருக்கைகள் அமைப்பது குறித்து ஆலோசனை செய்தார்.



▲ 2005-ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின்போது, பொது சொத்துகளை சேதப்படுத்தியதாக பதியப்பட்ட வழக்கில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் நேற்று ஆஜராக வந்தனர். படம்: ம.பிரபு



▲ தமிழக அரசின் சார்பில் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற வணிகர் நல வாரிய உறுப்பினர் சேர்க்கை சிறப்பு முகாமில் பங்கேற்ற வணிகர்களுக்கு தமிழக அரசின் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டையை திமுக வர்த்தகர் அணி மாநிலச் செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் வழங்கினார்.

## ரயில் நிலையங்களில்

# கண்காணிப்பு கேமரா பொருத்தும் பணி 2022-ல் நிறைவடையும்

● சென்னை ரயில்வே கோட்ட மேலாளர் கணேஷ் தகவல்

■ பொன்னேரி

சென்னை - கும்மிடிப்பூண்டி ரயில் மார்க்கத்தில் புறநகர் ரயில்கள் குறித்த நேரத்தில் இயக்கப்படுவதில்லை என புகார் தெரிவித்து, கடந்த 6-ம் தேதி பொன்னேரி ரயில் நிலையத்தில் பயணிகள் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்டத்தின் புதிய மேலாளராக கடந்த 9-ம் தேதி பதவி ஏற்றுக் கொண்ட கணேஷ் நேற்று கும்மிடிப்பூண்டி உள்ளடங்கிய சென்னை - கூடூர் ரயில்வே மார்க்கத்தில் உள்ள முக்கிய ரயில் நிலையங்களில் ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாவட்டம் - திருவொற்றியூர், திருவள்ளூர் மாவட்டம் - பொன்னேரி, எளாவூர், ஆந்திர மாநிலம் - தடா, சூளூர்பேட்டை, கூடூர் ஆகிய ரயில் நிலையங்களில் நடைபெற்ற இந்த ஆய்வில், பயணிகளுக்கான அடிப்படை வசதிகள், தேவைகள், ரயில் நிலையங்களின் மேம்பாட்டு பணிகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்தார்.



▲ பொன்னேரி ரயில் நிலையத்தில் நேற்று சென்னை ரயில்வே கோட்ட மேலாளர் கணேஷ் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, பொன்னேரி ரயில் நிலையத்தில் ரயில் பயணிகள் சங்கங்களின் நிர்வாகிகள், சிஐடியு உள்ளிட்ட தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள், புறநகர் ரயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும், ரயில்களை குறித்த நேரத்தில் இயக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மனுக்களை அளித்தனர்.

தொடர்ந்து, செய்தியாளர்களிடம் சென்னை ரயில்வே கோட்ட மேலாளர் கணேஷ் தெரிவித்ததாவது: பொன்னேரி ரயில் நிலையத்தில் பயணிகள் வசதிக்காக 2 மின் தூக்கிகள் அமைக்கப்பட உள்ளன. பயணிகளின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை ரயில்வே கோட்டத்தில் உள்ள ரயில் நிலையங்களில் பயணிகள் பாதுகாப்புக்காக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகள் வரும் ஆண்டு பிப்ரவரி மாதம் நிறைவடையும்.

கரோனா வழிகாட்டு நெறிமுறைகள் காரணமாக, தற்போது புறநகர் ரயில்களை அதிகளவில் இயக்குவதில் சிக்கல் நீடிக்கிறது. பல்வேறு இடங்களில் ரயில்வே மேம்பாலங்கள், பயணிகளுக்கான நடைமேம்பாலங்கள் அமைக்கும் பணிகள் ஆக்கிரமிப்புகளால் பாதிக்கப்பட்டுள்ளன. அலுவலக நேரங்களில் புறநகர் ரயில்களை குறித்த நேரத்தில் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வில், சென்னை ரயில்வே கோட்ட துணை மேலாளர் ஆனந்த், முதுநிலை மேலாளர் (இயக்குதல்) சிவாஜி அங்கோரா, முதுநிலை வணிக மேலாளர் வைஜெயந்தி மாலா உள்ளிட்ட ரயில்வே அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

# பைக்கில் பெட்ரோல் திருடியதை தட்டிக் கேட்டவர் கொலை

■ பொன்னேரி

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே உள்ள மேலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜேஷ்(24). கட்டுமான தொழிலாளியான இவர், நாள்தோறும் பணி நிமித்தமாக சென்னைக்கு மின்சார ரயிலில் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் போது, நந்தியம்பாக்கம் ரயில் நிலைய வளாகத்தில் உள்ள அனுமதியில்லாத வாகன நிறுத்துமிடத்தில் தன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு செல்வது வழக்கம்.

இந்நிலையில், ராஜேஷ், வழக்கம்போல், வாகன நிறுத்துமிடத்தில் நேற்று முன்தினம் தன் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு சென்றார்.

தொடர்ந்து, அவர் பணிமுடிந்து இரவு 9.20 மணிக்கு நந்தியம்பாக்கம் ரயில் நிலையம் திரும்பினார். அப்போது, ராஜேஷின் மோட்டார் சைக்கிளில் இருவர் பெட்ரோல் திருடிக் கொண்டிருந்தனர். இதைத் தட்டிக் கேட்ட ராஜேஷை, அந்த நபர்கள் கத்தியால் வெட்டியுள்ளனர்.

தலையில் படுகாயமடைந்த ராஜேஷ், ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்தார். இச்சூழலில், நேற்று அதிகாலை ராஜேஷ் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மீஞ்சூர் போலீஸார், ராஜேஷை கொலை செய்தது தொடர்பாக, மீஞ்சூர் அருகே உள்ள மவுத்தம்பேடுவைச் சேர்ந்த ராஜேஷ்(24), நந்தியம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தமிழ்(24) ஆகியோரைக் கைது செய்தனர்.

# அராபத் ஏரியில் 38 ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை

● பசுமை தீர்ப்பாயத்தில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் உறுதி

■ சென்னை

திருமுல்லைவாயல் அராபத் ஏரியில் உள்ள 38 ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

திருமுல்லைவாயல் அராபத் ஏரியில் கழிவுநீர் விடப்படுவதால் ஏரி மாசடைவதாக கடந்த ஆண்டு நாளிதழ் ஒன்றில் செய்தி வெளியானது. அதன் அடிப்படையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென் மண்டல அமர்வு தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்தது. தொடர்ந்து ஏரி மாசுபடுவதை தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர், ஆவடி மாநகராட்சி ஆணையர், பொதுப்பணித் துறை மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று அமர்வின் உறுப்பினர்கள் உத்தரவிட்டனர்.

இந்நிலையில், இந்த வழக்கு அமர்வின் நீதித்துறை உறுப்பினர் கே.ராமகிருஷ்ணன், தொழில்நுட்ப உறுப்பினர் கே.சத்யகோபால் ஆகியோர் முன்னிலையில் கடந்த 17-ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் தாக்கல் செய்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஆவடி தாலுக்கா, திருமுல்லைவாயல் கிராமத்தில் உள்ள அராபத் ஏரியை பொதுப்பணித் துறை பராமரித்து வருகிறது. இந்த ஏரியில் 38 ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றை அகற்ற பொதுப்பணித் துறை சார்பில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. விரைவில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று பொதுப்பணித் துறையின் கொசஸ்தலை ஆறு வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் உறுதியளித்துள்ளார். மாவட்ட நிர்வாகம் சார்பில் இந்த ஏரியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அமர்வின் உறுப்பினர்கள், இந்த வழக்கின் அடுத்த விசாரணையை செப்டம்பர் 16-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# காஞ்சியில் வீடு கேட்டு ஆயிரக்கணக்கில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்

● ஏழைகளுக்கு குடிசை மாற்று வாரிய வீடுகள் ஒதுக்கப்படுமா?

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் வீடு கேட்டு ஆயிரக்கணக்கானோர் விண்ணப்பித்துள்ளனர். இந்த வீடுகளை உண்மையில் வீடற்றோருக்கும், நிர்நிலைகளின் ஓரம் குடிசை போட்டு வாழும் ஏழை மக்களுக்கும் வழங்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேகவதி ஆற்றில் கடந்த 2015-ம் ஆண்டு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அப்போது வெள்ளநீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்தது. ஆற்றில் இருந்த ஆக்கிரமிப்புகளே இதற்கு காரணம் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதைத் தொடர்ந்து பொதுப்பணித் துறையினர் அளவீடு செய்ததில் 1,418 வீடுகள் ஆற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருப்பது தெரிந்தது. இதைத் தொடர்ந்து ஆற்றில் வீடு கட்டி வசிக்கும் மக்களை அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டு, அவர்களுக்காக குடிசை மாற்று வாரியம் மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டன.

மொத்தம் 2,112 வீடுகள் குடிசை மாற்று வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ளன. வேகவதி ஆற்றில் ஆக்கிரமித்து வீடு கட்டியவர்களில் விண்ணப்பித்த 1,406 பேருக்கு குடிசை மாற்று வாரியக் குடியிருப்பில் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 706 குடியிருப்புகள் மீதமுள்ளன. இதற்கு வீடு, நிலம் இல்லாத ஏழை மக்கள் மனுக்களை அளிக்கலாம் என்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

இந்த அறிவிப்பு வெளியானதும் அரசியல் கட்சிகளின் பரிந்துரையின் அடிப்படையில் வீடுகளைப் பெறலாம் என்று நிலம், வீடு வைத்துள்ளவர்கள் பலர் விண்ணப்பங்களை அளித்துள்ளனர். ஏற்கெனவே வீடுள்ள பலர் இந்த வீடுகளை வாங்கி மறு விற்பனை செய்யவும், வாடகைக்கு விடும் நோக்கத்திலும் விண்ணப்பங்களை அளித்துள்ளனர். தொடர்ந்து ஒவ்வொரு திங்கள்கிழமையும் பலர் மனுக்களை அளித்து வருகின்றனர்.

ஒருபுறம் இதுபோல் பலர் வீடு கேட்டு மனு அளிக்கும் நிலையில் மறுபுறம் ஏழ்மை நிலையில் வாழும் மக்களில் பலர் மனு அளிக்கக் கூட திக்கற்ற நிலையில் உள்ளனர். வீடு கேட்டு விண்ணப்பித்தால் பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூ.1.5 லட்சம் பணம் செலுத்த வேண்டி இருப்பதால், உண்மையில் வறுமையில் வாடும் மக்கள் பலர் விண்ணப்பம் அளிக்கக் கூட வரவில்லை. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற ஏழை, எளிய மக்களுக்கு அவர்களின் பங்குத் தொகையை செலுத்த முன்வர வேண்டும். உண்மையில் வறுமையில் வாடும் மக்களை கணக்கெடுத்து இந்த குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் வீடுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும். அரசியல் கட்சியினர் தலையிட அதிகாரிகள் அனுமதிக்கக் கூடாது என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

## PUBLIC NOTICE

The public in general and film trade in particular are hereby requested to take note that our clients are in the process of acquiring the following rights (a) All Linear Rights for distribution and redistribution via any and all means including but not limited to through satellite, cable, DTH, IPTV, terrestrial, internet, mobile etc. (b) Catch up TV rights (c) Syndication Rights (d) Sub-tiling rights in all languages (e) All other rights not specifically mentioned herein (collectively referred to as the “Rights”): for multiple telecasts for the territory of the entire world for the Term commencing from the Start Date for the Films as detailed hereinbelow:

| Sr. No | Film(s) | Star Cast | Language Granted | Linear Rights | Start Date | Term |
|---|---|---|---|---|---|---|
| 1 | Paranthu Sella Vaa | Luthfudeen, Aishwarya Rajesh, Narelle Kheng & Others | Tamil | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | Immediately | Perpetuity |
| 2 | Nalanum Nandhiniyum | Michael Thangadurai, Nandita Swetha & Others | Tamil | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | Immediately | Perpetuity |
| 3 | Goundamaniyin Enakku Veru Engum Kilaigal Kidaiyathu | Goundamani, Soundararaja, Riythvika & Others | Tamil | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | Immediately | Perpetuity |
| 4 | Calls | V.J.Chitra, Vinodhini, Devadarshini, R.Sundarrajan & Others | Tamil | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | Immediately | Perpetuity |
| 5 | Yaanum Theeyavan | Raju Sundaram, Ashwin Jerome, Varsha Bollamma, Ponvannan & Others | Tamil | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | Immediately | Perpetuity |
| 6 | Ivan Yarendru Therikiratha | Vishnu, Varsha Bollamma, Ishaara Nair & Others | Tamil | Exclusive - for India, and Non-exclusive - rest of the world | Immediately | Perpetuity |

The Film(s) are free from any encumbrances, claims or demands, whatsoever. However, should any person(s) have claim against, to, or in respect of any of the Film(s) mentioned hereinabove whether by way of any sale, license, assignment or otherwise, such person(s) are hereby required to make the same known in writing to us at our office at **B-116, Mittal Towers, Nariman Point, Mumbai - 400 021,** within ten (10) days from the date of publication hereof, failing which the transaction will be completed without reference to such claim and the same, if any, will be deemed to have been waived.

Place: Mumbai
Date: 20th August 2021

From:
Naik Naik & Co., B-116, Mittal Towers,
Nariman Point, Mumbai - 400 021.

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

**PUBLIC NOTICE**

Take notice that, my client intends to purchase 64 cents of Nanja land comprised in Survey Number 116/2, Kumizhi Village, Chengalpattu Taluk and Kanchipuram District,more fully described in the schedule below. It is represented that the original document, namely, a sale deed dated 19/02/1987, and executed by Mrs.Kannamal, w/o.Jayaram Chettiar and Mrs. Jayammal, w/o Veerabadra Chettiar in favour of Mr. Veerabadra Chettiar, s/o Kuppusvvamy Chettiar, vide document number 316 of 1987, SRO Thiruporur is lost or misplaced.

Further to this, in the sale deed executed by one Mr. K.Ganapathy Chettiar dated 17/03/2006, registered as document number 2450 of 2006, SRO Thiruporur in favour of the present owners Mrs.P.S.Deepika, w/o Dr. P. Sathyanarayana and Dr. P. Sathyanarayana, s/o Mr. P. Rama Rao, it has been stated that Mr. K.Ganapathy Chettiar's earnings were used to pay the consideration for the previous sale deed dated 19/02/1987, document number 316 of 1987, SRO Thiruporur and that is why the Patta contained the name of K.Ganapathy Chettiar also In the sale deed executed by Mrs. Ellamal Veerabardran dated 25/04/2006, registered as document number 3739, SRO Thiruporur in favour of Mrs. P.S. Deepika w/o Dr.P.Sathyanarayana and Dr. Sathyanarayana s/o.P. Rama Rao there is a ratification of the sale by Ganapathy Chettiar.

Therefore, any person, who has any rights, claims or interest in the said property, may make a claim with documentary evidence with the undersigned within 15 days from today. In the absence of any said claim, it will be presumed that the present owners, i.e., Mrs. P.S. Deepika w/o Dr. P. Sathyanarayana and Dr. Sathyanarayana s/o. P. Rama Rao have an absolute right upon this property and my client will go ahead with the proposed purchase.

**Schedule of property**

Nanja land measuring about 64 cents comprised in survey number 116/2, village no. 19,Kumizhi, Chengalpet Taluk,Kanchipuram District, bounded on the north by land owned by Perunderi,East by Canal from lake, west by balance land in 116/2 and south by Veerbadrian land.

**Dr. P. Vasudevan, Advocate**
Old no. 20, New No. 47,
St. Marys Street, Chenai-28
M: 9444049042

வருந்துகிறோம்!

இரங்கல்

ஆண்டு நினைவு நாள்



வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, J. MARY ALOYSIA, wife of Thiru Stanley Thomas, born on 21st June 1951 (native district: Chennai), residing at Old No. 20, New No. 3, Plot No. 49, Door No. 3/20, Sathyamurthy Street, Devaraja Nagar, Saligramam, Chennai-600093, shall henceforth be known as MARY ALOYSIA THOMAS - J. MARY ALOYSIA Chennai, 12th October 2020

திருமண சேவை மையம்

BRAHMINKALYANAM.COM, BKMATRI mony.com. Validity 1000 days+ Free Horoscope Matching. Regn Fees Rs.1000. Ct: 8939702500

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
வெள்ளி, ஆகஸ்ட் 20, 2021

# பள்ளி மறுதிறப்பு: மாற்றுத் திட்டங்களும் தயாராகவே இருக்கட்டும்

தமிழ்நாட்டில் கரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டவர்களில் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தை நெருங்கிக்கொண்டிருக்கிறது. கடந்த ஒரு வார காலமாகத் தினந்தோறும் 100-க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்குத் தொற்று பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுவருகிறது. இந்தியாவில் ஆகஸ்ட் இறுதியிலோ செப்டம்பர் ஆரம்பத்திலோ கரோனா பெருந்தொற்றின் மூன்றாவது அலை தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அதன் பாதிப்புக்கு 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஆளாகக்கூடும் என்ற அச்சம் பெற்றோர்களைப் பீடித்துள்ளது. 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இதுவரையில் மிகச் சில தடுப்பூசிகளில் மட்டுமே பரந்த அளவில் பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. நாட்டின் மிகப் பெரிய தடுப்பூசி உற்பத்தியாளரான பாரத் பயோடெக் நிறுவனம் 12-18 வயதுக்குட்பட்ட குழந்தைகளிடம் தடுப்பூசிப் பரிசோதனைகளை நடத்துவதற்குத் தன்னார்வலர்களை நியமித்துள்ளது. எனினும், அதன் உடனடிப் பயன்களை அடுத்த சில மாதங்களுக்குள் எதிர்பார்ப்பதற்கில்லை.

குழந்தைகளின் உடல்நலத்தைக் குறித்துக் கவலைகொள்ளும் அதே வேளையில், கரோனா காலத்தில் அவர்களின் மனநலம் குறித்தும் தீவிர அக்கறை காட்ட வேண்டியுள்ளது. ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் பள்ளிக் குழந்தைகள் அவர்களது வழக்கமான உற்சாகத்தை இழந்துள்ளனர். குழந்தைகளிடமிருந்து வெளிப்படும் அதிகப்படியான கோபம், அளவுக்கு அதிகமான வருத்தம் ஆகியவற்றுக்கு உரிய கவனம் கொடுக்கப்பட வேண்டும் என்று மனநல மருத்துவர்கள் வலியுறுத்துகிறார்கள். பாடங்கள் தடைபடக் கூடாது என்பதற்காக இணையவழி வகுப்புகள் நடத்தப்பட்டுவந்தாலும், பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று படிப்பதற்கு அவை ஒருபோதும் சரியான மாற்று ஆகாது. வீட்டிலேயே வகுப்பறைச் சூழலை உருவாக்குவது தொடர்பில் மும்பையைச் சேர்ந்த கல்வியாளர்களும் மனநல மருத்துவர்களும் இணைந்து மேற்கொண்ட சில பரிசோதனை முயற்சிகளும்கூட வெற்றிகரமாய் அமையவில்லை. பள்ளிகளைத் திறப்பதுதான் குழந்தைகளின் மனநலனை மீட்பதற்கான ஒரே வழி என்று அனைத்துத் தரப்பிலிருந்துமே பேச ஆரம்பித்துவிட்டனர்.

தமிழ்நாட்டில் செப்டம்பர் தொடக்கத்திலிருந்து 9 முதல் 12 வரையிலான வகுப்பு மாணவர்களுக்குப் பள்ளி தொடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொற்று இல்லாத பகுதிகளில் தனிமனித இடைவெளி உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றிப் பள்ளிகளைத் திறக்கலாம். ஆனால், பள்ளிகள் திறக்கப்படும் காலத்தில்தான் மூன்றாவது அலையும் எதிர்பார்க்கப்படுகிறது என்பதால் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் மாற்றுத் திட்டங்களுக்கும் தயாராக இருக்க வேண்டும். தொற்றுள்ள பகுதிகளில் பள்ளிகளைத் தற்காலிகமாக மூடிவைக்கவும் வேண்டும். அடுத்த கட்டமாக, 6 முதல் 8 வரையிலான வகுப்புக் குழந்தைகளை வாரத்துக்கு ஒரு முறையாவது பள்ளிக்கு அழைத்து, குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் வகுப்புகளை நடத்துவது பற்றியும் யோசிக்கலாம். ஒரு மணி நேரம் பாடங்களுக்கும், ஒரு மணி நேரம் விளையாட்டுக்கானதாகவும் இருக்கலாம். குழந்தைகளின் உடல்நலம், மனநலம் இரண்டுமே முக்கியம். பள்ளிக் கல்வித் துறையால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு திட்டமும் இவை இரண்டையுமே உள்ளடக்கியதாக இருக்கட்டும்.



# பருவநிலை மாற்றம்: காவிரிக் கரையின் பார்வை

**பனியைக் கொண்டே தழைக்கும் உளுந்தும் பயறும் வயல்வெளியிலிருந்து கிட்டத்தட்ட மறைந்துவிட்டன. அந்த இடத்துக்குப் பாசன உளுந்து வந்திருக்கிறது!**

பற்றியெரியும் புவி!

தங்க.ஜெயராமன்

உலகத்தை இப்போதுதான் புவியாகவும் பார்க்கப் பழகுகிறோம். சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களாகவே உலக நிகழ்வுகளைப் பார்த்திருக்கிறோம். விண்வெளியாகவும் வெப்பமாகவும் பனிப்பாறைகளாகவும் கடல் மட்டமாகவும் மழையாகவும் மண்ணாகவும் உலகத்தைப் பார்த்து அதைப் புவியாகவும் அவதானிக்கப் புதிதாகப் பழகிவருகிறோம். பருவநிலை மாற்றம் இந்த அவதானிப்புப் புரட்சியைத் தூண்டியிருக்கிறது.

ஆனால், காவிரிக் கரையில் இந்த அவதானிப்பு மரபு புதியதல்ல. மண்ணும் நீரும் மழையுமே இங்கு மனிதர்கள் வலுவாக உணர்ந்த உறவுகள். ஐந்து தசாப்த நிகழ்வுகளைப் பருவநிலை மாற்றப் பின்னணியில் இங்கு புரிந்துகொள்ள இயலும். புவிப் பரப்பு முழுவதும் நிகழும் மாற்றமானாலும் அதற்கு அந்தந்த இடம் சார்ந்த உள்ளூர் புரிதலும் உள்ளதுதானே!

### காற்றோடு வரும் காவிரி

ஐந்து மாற்றங்கள் காவிரிப் படுகையின் பருவ நிலையோடு தொடர்புள்ளவை: மேலக்காற்று என்ற தென்மேற்குப் பருவக்காற்று இப்போது வலுவாக இல்லை. ஐப்பசி, கார்த்திகை அடைமழை குறைகிறது. ஆறு வாங்காமல் எதிர்த்துக்கொள்வதால் பெய்யும் மழையும் வயல்களிலிருந்து வடிவதில்லை. மார்கழியின் கர்ப்போட்டக் கால மேகங்கள் கண்ணுக்குப் படுவதில்லை. தை மாதப் பனியும் குளிரும் அப்போதுபோல் இல்லை.

மே மாத நடுவிலிருந்து மேலக்காற்று தொடங்கிவிடும். கட்டைவண்டிகூட மேற்கிலிருந்து கிழக்கே வந்தால் மாடுகளை விரட்டாமலேயே வேகமாக வரும். அதுவே கிழக்கிலிருந்து மேற்கே சென்றால் எதிர்க்காற்றில் முயன்றுதான் நகர வேண்டியிருக்கும். காய்ந்த பனை ஓலையை வளைத்துச் சுற்றி, முனைகளைக் கருவை முள்ளால் இணைத்து, சிறிய சக்கரமாகச் செய்துகொள்வோம். ஆற்று மணலில் அதை வைத்தால் போதும்; மேலக்காற்றில் அது உருளும் வேகத்துக்குக் கூடவே ஓடி சிறுவர்களால் அதைப் பிடிக்க முடியாது. ஆடை சலசலப்பதுபோல் தூவாளி மணலை மேலக்காற்று தூற்றிச் சென்று ஆற்றுக் கரையோரம் சரித்துக் குவித்துவிடும்.

மேலக்காற்று காவிரியில் தண்ணீரைக் கொண்டுவரும் என்று சொல்வது வழக்கம். ஓடிவரும் வெள்ளத்தின் முதுகு சிலிர்க்கச் சிலிர்க்க இந்தக் காற்று அதைத் தழுவிக்கொண்டே இன்னும் வேகமாக வீசும். இங்கு மேற்குபார்த்த வீடுகளை விரும்ப மாட்டார்கள். அதுபோலவே புயலுக்குப் பயந்து தெற்குபார்த்த வீடுகளின் கூரையையும் உயரமாக வைக்க மாட்டார்கள். இன்றைய பருவநிலை இவற்றையெல்லாம் கவனித்து வீடு கட்டும்படி யாரையும் கட்டாயப்படுத்துவதில்லை!

ஐப்பசி அடைமழை சன்னமாகக் குறைகிறது. வழக்கத்துக்கு மாறாக, ஆனி ஆடி மாதங்களில் நாள் விட்டு நாள் நசுங்கலாகவும், சில நேரம் ஊன்றிப் பெய்யும் மழையாகவும் பருவம் தவறுகிறது. ஐப்பசி, கார்த்திகையில் அப்போதெல்லாம் பகல், அந்தி, இரவு என்று தெரியாமல் இழைந்துபோகுமாறு வானம் மூடிக்கொள்ளும். ஈசானியத் திக்கிலிருந்து பறக்கும் மாசி பாட்டம் பாட்டமாக பொழிந்துகொண்டே வானத்தில் கரைந்துபோகும். குடை தாங்காத மழை என்பதால் தென்னங்கீற்றில் குடலை செய்து தலையையும் முதுகையும் மறைத்து மாட்டிக்கொண்டு நடப்பார்கள். சோரப் பெய்யும் மழையால் தரையில் அடிவைக்கும் இடமெல்லாம் தண்ணீர் கொப்பளிக்கும். சிவப்பு, வெள்ளை, நீலோத்பலம் என்று அல்லி மலர் அடைத்துப் பூத்த குளமும் குட்டையும் வாய்க்காலும் இப்போது எங்கே ஒளிந்துகொண்டன?

மாட்டுக்குக் காய்ந்த வைக்கோல் ருசிப்பதுபோல் பச்சைப் புல் ருசிக்காது. பச்சைக் காய்கறியோ, அப்போதே பிடித்த மீனோ, அப்போதைய ஆட்டுகறியோ நமக்கு ருசிக்காது. கத்திரி வத்தல், அடைமாங்காய், கருவாடு, உப்புக்கண்டம்... இப்படி உப்பிட்டுக் காயவைத்த பண்டங்கள் மட்டுமே ருசிக்கும் நிலைக்கு மழைக்கால உடம்பு குன்றிப்போகும். மழைக்காலம் மழைக்காலமாக இல்லாத இந்தக் காலத்தில் இந்த ருசி பேதமும் நாக்குக்கு மரத்துப்போனது. பருவநிலை மாற்றத்துக்கு நம் உடம்பும் சொல்லாமலேயே மிக நுணுக்கமாக இப்படி மாறிக்கொள்வது விந்தைதான்.

வயலிலிருந்து வடியும் குறைந்த மழையையும் இப்போது ஆறு வாங்கிக்கொள்வதில்லை. ஆற்றின் எதிர்ப்புக்கு அதன் போக்கில் வளர்ந்த சீமைக் காட்டாமணியும் கடலோர இறால் குட்டைகளும் காரணம் என்று நினைத்திருந்தோம். இப்போது கடல் மட்டம் உயர்வதால் வரும் கடல் எதிர்ப்பும் ஒரு காரணமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. மழை நின்று பத்து நாட்களாகின்றன; வெள்ளம் கிடையாது. ஆனால், வடிய வேண்டிய தண்ணீரை வாய்க்காலும் ஆறும் வாங்கவில்லை என்றால் அதற்கு வேறு என்ன காரணம் சொல்வது?

### தொழிற்புரட்சிதான் தொடக்கமோ?

மழைக்காலம் முடிவதற்கு அடையாளமாக மார்கழி பாதிவாக்கில் வடகிழக்கிலிருந்து தென்மேற்காக வெண்மேகங்கள் கூட்டம் கூட்டமாகச் செல்லும். நேற்றுவரை கறுத்துக் கிடந்த வானம் இப்படி வரும் பொதி மேகங்களுக்குப் பெருந்தடமாக மாறிக்கொள்ளும். இதற்குக் கர்ப்போட்டம் என்று பெயர். மேகங்களின் போக்கு எவ்வளவு அதிகமோ அந்த அளவுக்கு அடுத்த ஆண்டு மழையும் அதிகமாகும் என்று சொல்வார்கள். நாம் ஒரு மேகத்தைப் பார்த்து ரசித்து ஓய்வதற்குள் அதைத் துரத்திக்கொண்டு அந்த இடத்துக்கு அடுத்த மேகம் வந்துவிடும். இப்போதெல்லாம் கர்ப்போட்ட மேகங்களை அதிகம் காண முடிவதில்லை. மழை குறைந்துவருகிறது என்பது வெறும் ஊகமல்ல என்பதற்கு இந்தத் தொடர் நிகழ்வை ஆதாரமாக்கலாம்.

எப்போதாவது மார்கழி, தை மாதங்களில் வெறும் புகைமூட்டமாக இருக்கும் பனியைப் பார்க்கிறோம். மழை பெய்து கூரைவாரி ஊற்றியதுபோல் அப்போது பெய்யும் பனி இப்போது இல்லை. தென்னை மரங்களுக்குக் கீழே திட்டுத்திட்டாகப் பனி சொட்டிக் கிடக்கும். குளிரில் மனிதர்களுக்குத் தூக்கம் கலைந்துவிடும். கோழி கூவுவதற்கு முன்பாகவே விழித்து, கிடைத்ததைக் கொளுத்திப்போட்டு வீட்டுக்குள்ளேயே கைகால்களைக் காய்ச்சிக்கொள்வார்கள். குளிர்காயும் சுகமும் உடம்புக்கு மறந்துபோனது. பனியைக் கொண்டே தழைக்கும் உளுந்தும் பயறும் வயல்வெளியிலிருந்து கிட்டத்தட்ட மறைந்துவிட்டன. அந்த இடத்துக்குப் பாசன உளுந்து வந்திருக்கிறது.

பருவநிலை மாற்றத்துக்குத் தக்க எப்படியோ நாமும் மாறிக்கொண்டே இருப்பதால் மாற்றங்கள் நம் பிரக்ஞைக்குள் திரண்டு இருப்பு பெறுவதில்லை. வரலாறு மிகவும் விதந்துகொள்ளும் தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுத்தான் மாற்றங்களை அடையாளம் காண்கிறார்கள். அந்தப் புரட்சியைப் பருவநிலை மாற்றத்தின் தொடக்கமாக்குவதும் நமக்கு ஒரு அதிர்ச்சியே!

- தங்க.ஜெயராமன், 'காவிரி வெறும் நீரல்ல' உள்ளிட்ட நூல்களின் ஆசிரியர்.
தொடர்புக்கு: profjayaraman@gmail.com



# தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்குக் குழிபறித்த குப்தா சகோதரர்கள்

**காந்தியின் வழி நின்று நிறவெறியிலிருந்து விடுபட்டு முன்மாதிரி ஆப்பிரிக்கத் தேசமாக வளர்ந்துவந்த தென்னாப்பிரிக்காவின் சரிவுக்கும் இந்தியர்கள் சிலரே காரணமாகியிருப்பது வரலாற்றின் கழுவ முடியாத கறை!**

எஸ்.எஸ்.லெனின்

இந்தியாவிலிருந்து தென்னாப்பிரிக்கா சென்ற மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்கு அங்கு ஏற்பட்ட நிறவெறிக் கசப்பனுபவம்தான் பின்னாளில் அவரை மகாத்மா காந்தி ஆக்கியது. அவரது அகிம்சை வழியைப் பின்பற்றி, தென்னாப்பிரிக்காவின் நிறவெறி ஆட்சிக்கு முடிவுகட்டினார் நெல்சன் மண்டேலா. இந்தியாவுக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும் இடையிலான உறவு அவ்வளவு ஆழமானது. அதே தென்னாப்பிரிக்கா கடந்த சில வாரங்களாகக் கலவரத்தால் பற்றி எரிவதன் பின்னணியில், 'குப்தா பிரதர்ஸ்' எனும் இந்திய சகோதரர்கள் இருப்பது வேதனை தரும் விஷயம்.

### தோல்வியில் தொடங்கிய ஜுமா

நீண்ட நாள் சிறைவாசத்துக்குப் பின்னர் விடுதலையாகி 1994–ல் தென்னாப்பிரிக்காவின் அதிபர் ஆனார் நெல்சன் மண்டேலா. அவரது ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியானது தேசம் நெடுக அமோக வெற்றி பெற்றபோதும், குவாஜுலு நடால் என்ற மாகாணத்திலிருந்து போட்டியிட்ட ஜேக்கப் ஜுமா தோல்வி அடைந்திருந்தார். ஆனபோதும் அவரது கட்சிப் பணியைப் பாராட்டிக் கௌரவப் பதவிகள் அளிக்கப்பட்டன.

தான் சார்ந்த ஜுலு இனத்தின் ஒட்டுமொத்தப் பிரதிநிதி என்பதாகத் தன்னை முன்னிறுத்திக்கொண்ட ஜுமா, கட்சியிலும் ஆட்சியிலும் தனது செல்வாக்கை வளர்த்துக்கொண்டார். கட்சியின் துணைத் தலைவர்களில் ஒருவர், நாட்டின் துணை அதிபர்களில் ஒருவர் என்று அசுர வளர்ச்சி பெற்றார். ஆப்பிரிக்க தேசங்களில் முதலாவதாகப் பீடு நடைபோட்ட தென்னாப்பிரிக்காவின் வளர்ச்சி, ஜுமா துணை அதிபராக இருந்த ஏழு ஆண்டுகளில் அடுத்தடுத்த ஊழல்களால் பின்னடைவைச் சந்தித்தது.

### அதிரவைத்த வழக்கு விசாரணை

பாலியல் குற்றச்சாட்டு ஒன்றில் பதவி இழக்கும்வரை ஜுமா தனது ஊழல் திருவிளையாடல்களைத் தொடர்ந்தார். எனினும், பாலியல் வன்கொடுமைக்கு ஆளான இளம்பெண்ணுக்கு எதிராகவே வழக்கின் போக்கு திரும்பும்படி செய்தார். அந்தப் பெண்ணின் சம்மதத்துடனே உறவு நிகழ்ந்தது. அந்தப் பெண் நடத்தை கெட்டவர், மனநலன் பாதிக்கப்பட்டவர் என்றெல்லாம் விசித்திர வாதங்கள் வைக்கப்பட்டு வழக்கின் முடிவு இறுதியில் ஜுமாவுக்கு சாதகமாகவே முடிந்தது.

ஜுமாவை ஊழல் வழக்குகள் வளைத்தபோதும் பிரத்யேக பாணியில் அவற்றை எதிர்கொண்டார். தனது நிதிசார் முடிவுகளுக்கு வலதுகரமாக இருந்த ஷபிர் ஷேக் மீதே எல்லா வழக்குகளையும் எழுத வழிவகுத்ததில் ஷபிர் 15 ஆண்டுகாலச் சிறைத் தண்டனைக்கு ஆளானார். (இந்த ஷேக் பின்னாளில் ஜுமா அதிபரானதும் மருத்துவக் காவல் என்ற பெயரில் விடுதலையானார்.)

### முதலடி வைத்த குப்தா

அதன் பின்னர் ஜுமா தனது அரசியல் சதிராட்டத்தின் அடுத்த இன்னிங்ஸை ஆரம்பித்தார். 2007–ல் கட்சித் தலைவராகவும், அடுத்த 2 ஆண்டுகளில் நாட்டின் அதிபராகவும் வளர்ந்தார். அங்கு தொடங்கி 2018 வரையிலான அவரது ஆட்சிக் காலத்தில் தேசத்தின் எல்லாத் துறைகளிலும் ஊழலே கொழித்தது. ஊழல் பாதையில் தனக்கு உதவியவர்களையெல்லாம் உயர்த்தி அழகு பார்த்தார். அப்படி உயர்ந்தவர்களில் இந்தியாவின் 'குப்தா சகோதரர்கள்' முக்கியமானவர்கள்.

மேற்கு உத்தர பிரதேசத்தின் சஹாரன்பூரில் ஒரு வர்த்தகக் குடும்பத்தில் பிறந்தவர்கள் அதுல், அஜய், ராஜேஷ் குப்தாக்கள். சுதந்திரக் காற்றைக் சுவாசிக்கத் தயாரான தென்னாப்பிரிக்கா அதுல் குப்தாவை ஈர்த்தது. தென்னாப்பிரிக்க நகரங்களில் ஓட்டைக் காரில் காலணிகளை அடுக்கி வீதி வீதியாக விற்றபடி அடுத்த கட்டம் குறித்து அதுல் சிந்திக்கத் தொடங்கினார். 1990–களில் கொடிகட்டிப் பறந்த கணினி சார்ந்த வாய்ப்புகளுக்கு தென்னாப்பிரிக்காவில் போட்டி இல்லை என்றதும் தம்பிகளை வரவழைத்து 'சஹாரா கம்ப்யூட்டர்ஸ்' நிறுவனத்தைத் தொடங்கினார். அரசியலர்களை வரவழைத்துப் பிரம்மாண்டமான நிகழ்ச்சிகளை நடத்தி அரசின் ஆர்டர்களை அள்ளினார்.

### சூறையாடிய 'ஜுப்தா' சகாப்தம்

அந்த ஆர்டர்களுக்காக ஜுமாவிடம் அவர்கள் சரணடைந்தனர். எதையும் செய்யத் தயங்காத குப்தாக்களின் அணுகுமுறை ஜுமாவுக்கு ரொம்பவே பிடித்துப்போனது. இங்கிருந்தே 'ஜு(மா)–(கு)ப்தா' ஒருங்கிணைந்த 'ஜுப்தா' சகாப்தம் தென்னாப்பிரிக்காவில் தொடங்கியது.

அமைச்சர்கள், அதிகாரிகளை வளைப்பதில் குப்தாக்களின் பாணி அலாதியானது. தங்களுக்குச் சரிப்படாதவர்களை ஜுமாவின் ஆசியுடன் களையெடுப்பார்கள். முன்பேர ஒப்பந்தத்துக்கு உடன்படும் நபர்களே நாற்காலிகளை அலங்கரிப்பார்கள். ஜுமா துணை அதிபரானபோது அவரே வியக்கும்படி குப்தா சகோதரர்கள் புகுந்து விளையாடினார்கள். பாலியல் நாட்டம், சுகபோக வாழ்க்கை என ஜுமாவின் பலவீனங்கள் குப்தாக்களுக்கு வசதியாகின.

### முதல் விஷ வித்து

ஜுமா அதிபரானபோது அரசின் கருவூலத்தை நேரடியாகக் கையாளும் அளவுக்கு குப்தாக்கள் வளர்ந்ததை ஆளுங்கட்சியின் அடுத்த கட்டத் தலைவர்கள் விரும்பவில்லை. குப்தாக்களின் வர்த்தக உறுதுணைக்காக ஏராளமான இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்குக் குடியேறியிருந்தார்கள். அதிகார போதையில் அவர்களில் சிலர் வெள்ளையினத்தவருக்கு நிகரான நிறவெறியுடன் நடந்துகொண்டார்கள். இந்த விஷ வித்து தென்னாப்பிரிக்கக் கறுப்பின மக்கள் மனதில் ஆழமாக விழுந்தது. குப்தாக்களின் அசுர வளர்ச்சி மீதான தென்னாப்பிரிக்கர்களின் பார்வை அதன் பின்னர் வேறானது.

### ஜுமா கைதும் கலவரத் தீயும்

உட்கட்சித் தலைவர்களின் அதிருப்தி, எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் காரணமாகத் திரண்ட நெருக்கடி நெட்டித்தள்ளியதில் 9 ஆண்டு கால அதிபர் பதவியை ஜுமா ராஜிநாமா செய்ய வேண்டியதாயிற்று. அதே கட்சியைச் சேர்ந்த சிரில் ராமபோசா 2018–ல் அதிபரானார். ஆனால், கட்சி பாசத்தில் ஜுமாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அரசு மென்போக்கு கொண்டிருப்பதாக மக்கள் கசப்படைந்தனர். மக்களின் மனப்போக்கை நாடிபிடித்த தலைமை சுதாரித்துக்கொண்டது.

தன்னிடம் இருந்த ஆவணங்கள் சிலவற்றை முறையாகச் சமர்ப்பிக்காத நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் 15 மாதச் சிறைத் தண்டனைக்கு ஆளானார் ஜுமா. உடனே அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் இறங்கினர். இன்னொரு வகையில் வேலைவாய்ப்பின்மை, பொருளாதாரச் சீரழிவு, ஊழல் முறைகேடுகள், முத்தாய்ப்பாகப் பெருந்தொற்று நெருக்கடியை அரசு அலட்சியமாகக் கையாண்டது... எனக் குமுறிக்கொண்டிருந்த பொதுமக்களும் கலவரத்தில் குதித்தனர்.

### குறிவைக்கப்பட்ட இந்தியர்கள்

பசியில் சுருண்டிருந்த மக்கள் சூப்பர் மார்க்கெட்டுகள், உணவுப் பொருள் சேமிப்பிடங்களைச் சூறையாடினார்கள். இந்த நெரிசலில் சிக்கிப் பலர் இறந்ததும், கலவரக்காரர்களின் கோபம் குப்தா சகோதரர்களின் அட்டூழியங்கள் மீது மையம் கொண்டது. பின்னர், அங்கு வசிக்கும் இந்தியர்கள் மீது அந்தக் கோபம் திரும்பியது. தென்னாப்பிரிக்க விடுதலைப் போராட்டத்தில் இந்தியர்கள் பங்கெடுத்த வரலாறு கலவரக்காரர்களால் பொருட்படுத்தப்படவில்லை. இதற்கிடையே, ஜுமா ராஜிநாமா என்றதுமே குப்தா குழுமம் அடியோடு சுருட்டிக்கொண்டு அரபு நாடுகளுக்குப் பறந்துவிட்டது. அவர்கள் மீதான கோபத்தில் அப்பாவி இந்தியர்களைக் கலவரக்காரர்கள் காவு வாங்கினார்கள்.

டர்பன், ஜோகன்னஸ்பர்க் என இந்தியர்கள் அதிகம் வசிக்கும் நகரங்களில் தாக்குதல் அதிகரித்தன. கலவரத்தில் கொல்லப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களில் இந்தியர்களே அதிகம். இந்திய வெளியுறவுத் துறை அதிகாரபூர்வமாக அழுத்தம் கொடுத்த பிறகே தென்னாப்பிரிக்க ராணுவம் வீதிகளில் இறங்கிக் கலவரத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்திருக்கிறது. கலவரத்தீ தற்போதைக்கு மட்டுப்பட்டபோதும் உள்ளுக்குள் இன்னமும் கனன்றுகொண்டிருப்பதால், உயிரச்சத்தில் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் தத்தளித்துவருகிறார்கள்.

மகாத்மா காந்தியின் வழி நின்று நிறவெறியிலிருந்து விடுபட்டு முன்மாதிரி ஆப்பிரிக்க தேசமாக வளர்ந்துவந்த தென்னாப்பிரிக்காவின் சரிவுக்கும் இந்தியர்கள் சிலரே காரணமாகியிருப்பது வரலாற்றின் கழுவ முடியாத கறையாக மாறியிருக்கிறது!

- இது போன்ற கட்டுரைகளை 'காமதேனு' மின்னிதழில் (https://www.hindutamil.in/kamadenu) படிக்கலாம்.

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in

சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா. அஞ்சல் முகவரி:
ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.

கோடநாடு எஸ்டேட் கொலை, கொள்ளை வழக்கில்

# சயானிடம் நடத்தப்பட்ட மறுவிசாரணை அறிக்கை ஆக.27-ல் உதகை நீதிமன்றத்தில் தாக்கல்

■ உதகை

கோடநாடு எஸ்டேட் கொலை, கொள்ளை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சயானிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை உதகையிலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் ஆக.27-ல் போலீஸார் தாக்கல் செய்ய உள்ளனர்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே கோடநாடு பகுதியில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்கு சொந்தமான தேயிலை எஸ்டேட் உள்ளது. இந்த தேயிலை எஸ்டேட் மற்றும் பங்களாவுக்குள் 2017 ஏப்.23-ல் ஒரு கும்பல் புகுந்து, காவலாளி ஓம்பகதூரை கொலை செய்தது.

பின்னர், பங்களாவுக்குள் சென்று பல்வேறு பொருட்களை கொள்ளையடித்துச்சென்றது. இந்த வழக்கில் சயான், வாளையாறு மனோஜ் உட்பட 10 பேரை கோத்தகிரி போலீஸார் கைது செய்தனர். 10 பேரும் தற்போது ஜாமீனில் உள்ளனர். இவ்வழக்கு விசாரணை உதகையில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், இவ்வழக்குக்காக ஷாஜகான் மற்றும் கனகராஜ் ஆகிய இருவர் அரசின் சிறப்பு வழக்கறிஞர்களாக நியமிக்கப்பட்டனர். கடந்த 13-ம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்த போது, அரசு வழக்கறிஞர்கள், கோடநாடு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் மீண்டும் விசாரணை நடத்த வேண்டும் என நீதிபதியிடம் மனு அளித்தனர். இதையடுத்து, மீண்டும் சயானிடம் விசாரணை நடத்த கோத்தகிரி போலீஸார் சம்மன் அனுப்பினர். அவர்கள் முன்பு சயான் கடந்த 17-ம் தேதி நேரில் ஆஜரானார்.

உதகையில் உள்ள பழைய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சயானிடம் காவல் கண்காணிப்பாளர் ஆஷிஸ் ராவத், குன்னூர் துணை கண்காணிப்பாளர் சுரேஷ், கோத்தகிரி ஆய்வாளர் வேல்முருகன் ஆகியோர் சுமார் 3 மணி நேரம் விசாரணை நடத்தினர். வரும் 27-ம் தேதி இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருகிறது. அப்போது, சயானிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையை உதகை நீதிமன்றத்தில் போலீஸார் தாக்கல் செய்ய உள்ளனர்.

இதுகுறித்து போலீஸார் கூறும்போது, "சயான் தெரிவித்த தகவல்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு, தொடர்புடையவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்படும்" என்றனர். கடந்த 3 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பு அளிக்கப்பட இருந்த நிலையில், மீண்டும் விசாரணை தொடங்கியுள்ளதால் இவ்வழக்கில் திருப்பம் ஏற்பட்டு உள்ளது.

கர்நாடக மாநிலம் மைசூருவில் உள்ள

# தமிழ் கல்வெட்டுகளை சென்னைக்கு மாற்ற வேண்டும்

● மத்திய தொல்லியல் துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

■ மதுரை



மைசூருவில் உள்ள தமிழ் கல்வெட்டுகள் அனைத்தையும் சென்னையில் உள்ள தமிழ் கல்வெட்டியியல் பிரிவுக்கு 6 மாதத்துக்குள் மாற்ற வேண்டும் என மத்திய தொல்லியல் துறைக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையைச் சேர்ந்த மணிமாறன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: கல்வெட்டுகள், பனை ஓலை குறிப்புகள், அகழாய்வில் கிடைத்த பொருட்களில் இருந்து வரலாற்று ஆவணங்கள் கிடைக்கின்றன. பெரும்பாலான தகவல்கள் கல்வெட்டுகளில் இருந்து கிடைக்கின்றன. தமிழகத்தில் 1961-ல் கல்வெட்டியியல் துறை ஏற்படுத்தப்பட்டது.

தமிழகத்தின் பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது, அகழாய்வில் கிடைக்கும் பழங்காலப் பொருட்களை ஆவணப்படுத்தி பாதுகாப்பது, பழமைக்கு ஆதாரமான கலை சிற்பங்களை பாதுகாப்பது, அவற்றை அனைவரும் அறியும் வகையில் புதுப்பித்து வெளியிடுவது ஆகியன தொல்லியல் துறையின் முக்கிய பணியாகும்.

மைசூரு கல்வெட்டியியல் துறை கட்டுப்பாட்டில் சுமார் ஒரு லட்சம் கல்வெட்டுகள் உள்ளன. இதில் 65 ஆயிரம் கல்வெட்டுகள் தமிழுடன் தொடர்புடையவை. இந்த கல்வெட்டுகள் தற்போது வரை புதுப்பித்து வெளியிடப்படவில்லை. எனவே, மைசூர் கல்வெட்டியியல் அலுவலகத்தில் உள்ள தமிழ் மொழி தொடர்பான கல்வெட்டுகளை தமிழக தொல்லியல்துறையிடம் ஒப்படைக்கவும், அவற்றை நவீன தொழில்நுட்ப முறையில் பாதுகாக்கவும், அதற்கு தேவையான நிதி ஒதுக்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கை நீதிபதிகள் என்.கிருபாகரன், எம்.துரைசாமி அமர்வு விசாரித்தது. மனுதாரர் சார்பில் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ வாதிட்டார். பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: சென்னையில் இயங்கி வரும் மத்திய தொல்லியல்துறையின் கல்வெட்டியியல் கிளையின் பெயரை, தமிழ் கல்வெட்டியியல் கிளை என பெயர் மாற்றம் செய்ய வேண்டும். மைசூர் மற்றும் பல்வேறு இடங்களில் உள்ள தமிழ் தொடர்பான அனைத்து ஆவணங்கள், தமிழ் கல்வெட்டுகள் அனைத்தையும் சென்னை தமிழ் கல்வெட்டியியல் கிளைக்கு மத்திய தொல்லியல் துறை 6 மாதத்துக்குள் மாற்ற வேண்டும்.

மத்திய தொல்லியல்துறையில் உள்ள கல்வெட்டியியல் பிரிவு உட்பட அனைத்து பிரிவுகளிலும் போதுமான நிபுணர்களை பணியமர்த்த வேண்டும். சென்னை கல்வெட்டியியல் பிரிவுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் தமிழக அரசு செய்து தர வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

## சின்னச் சின்னதாய்...



▲ திருச்செந்தூர் செந்திலாண்டவர் கோயிலில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வரும் சவுந்தர்யா.

### ரஜினி மகள் சவுந்தர்யா திருச்செந்தூரில் தரிசனம்

**தூத்துக்குடி:** திருச்செந்தூர் செந்திலாண்டவர் கோயிலில் நடிகர் ரஜினிகாந்தின் இளைய மகள் சவுந்தர்யா, தனது கணவருடன் நேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

நடிகர் ரஜினிகாந்தின் 2-வது மகளும் திரைப்பட இயக்குநருமான சவுந்தர்யா, தனது கணவர் விசாகனுடன் நேற்று காலை திருச்செந்தூர் கோயிலுக்கு வந்தார். கோயிலில் நடைபெற்ற அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜைகளில் கலந்து கொண்டு, சுமார் 2 மணி நேரம் வழிபாடு நடத்தினார்.

தொடர்ந்து, கோயில் யானை தெய்வானைக்கு பழங்கள், வெல்லம் மற்றும் கரும்புகள் வழங்கி ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். கரோனா ஊரடங்கால் இன்று முதல் 3 நாட்களுக்கு தரிசனத்துக்கு அனுமதி இல்லை என்பதால், நேற்று கோயிலில் பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாக இருந்தது. கோயிலில் திரண்டிருந்த பக்தர்கள், சவுந்தர்யா வந்திருப்பதை அறிந்து ஆர்வமுடன் அவரை வேடிக்கை பார்த்தனர்.

### வேலூர் முன்னாள் அதிமுக எம்பி மறைவு



▲ பா.செங்குட்டுவன்

**வேலூர்:** அதிமுக சார்பில் 2014-2019-ல் வேலூர் தொகுதி எம்பியாக இருந்தவர் வழக்கறிஞர் பா.செங்குட்டுவன்(60). கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டு கடந்த ஒரு வாரமாக வேலூரில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், நேற்று காலை காலமானார். அவரது உடல் காட்பாடி திருநகர் பகுதியில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ஜெயலலிதா மறைந்த பிறகு அமமுகவுக்குச் சென்றவர் மீண்டும் அதிமுகவில் இணைந்தார். கட்சிப் பணியில் இருந்து அவர் விலகியே இருந்தார். செங்குட்டுவனின் மனைவி ஜெயந்தி. இவர், வேலூர் எல்ஐசி அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர். செங்குட்டுவனின் உடல் வேலூர் பாலாற்றங்கரையில் உள்ள எரிவாயு தகன மேடையில் நேற்று மாலை எரியூட்டப்பட்டது.

### சிறுமியை ஏமாற்றி 5-வது திருமணம்



▲ சையத் அலி

**கும்பகோணம்:** மதுரை மாவட்டம், மகபூபாளையத்தைச் சேர்ந்த சையத் அலி(40), கும்பகோணத்தில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்த போது, உடன் பணிபுரிந்த 17 வயது சிறுமியை கடந்த ஜன.12-ல் கடத்திச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. போலீஸார் சையத் அலியை கடந்த 7 மாதங்களாக தேடிவந்தனர்.

இந்நிலையில், நாச்சியார்கோவிலில் நேற்று முன்தினம் சையத் அலியை போலீஸார் பிடித்து, போக்ஸோ சட்டத்தின்கீழ் கைது செய்தனர். சிறுமியை பெற்றோருடன் அனுப்பிவைத்தனர். விசாரணையில், சையத் அலி பெங்களூரு, மதுரையில் தலா ஒரு பெண்ணையும், கும்பகோணத்தில் 2 பெண்களையும் ஏமாற்றி திருமணம் செய்துகொண்டு, பணம் மற்றும் நகையை சுருட்டிக்கொண்டு கைவிட்டதும், தற்போது 5-வதாக இந்தச் சிறுமியை திருமணம் செய்துகொண்டதும் தெரியவந்தது.

## 'பஞ்ச்'சோந்தி பராக்!

விண்ணப்பித்துப் பெறுவதற்குப் பெயர் விருது அல்ல!
– கமல்ஹாசன்




- அரங்க சேகர், சென்னை.

● **செய்தி:** தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றாத தி.மு.க அரசைக் கண்டித்து த.மா.கா கவனஈர்ப்பு ஆர்ப்பாட்டம்!

**பஞ்ச்:** இனிமேலாவது மக்களுக்கு த.மா.கா மீது கவனஈர்ப்பு உண்டாகட்டும்! - எம்.கல்லூரி ராமன், கரிசல்புளி.

● **செய்தி:** தலிபான்களின் வெற்றிக்கு ஆப்கானிஸ்தான் அரசே பொறுப்பு! – அமெரிக்க அதிபர் ஜோ பைடன்

**பஞ்ச்:** அப்ப ஆப்கானிஸ்தான் அரசின் தோல்விக்கு நீங்கதான் பொறுப்புன்னு சொல்லுங்க! - இரா.ரவிக்குமார், சென்னை.

கும்பகோணம் அருகே

# 100% கரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்ட சோழன்மாளிகை ஊராட்சி

■ கும்பகோணம்

கும்பகோணம் அருகேயுள்ள சோழன்மாளிகை ஊராட்சியில் 100 சதவீதம் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சோழன்மாளிகை ஊராட்சியில் 9 வார்டுகளில் 962 வீடுகள் உள்ளன. இங்கு 18 வயதுக்கு மேற்பட்டோர் 1,950 பேர் வசித்து வருகின்றனர். இந்த ஊராட்சியில் தகுதி உள்ள அனைவருக்கும் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு, 100 சதவீதம் பூர்த்தி அடைந்ததைத் தொடர்ந்து, ஊராட்சி மன்ற அலுவலகத்தில் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஊராட்சி நிர்வாகம் சார்பில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவுக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் பி.ஜெயக்குமார் தலைமை வகித்தார். விழாவில் பட்டீஸ்வரம் வட்டார சுகாதார மருத்துவ அலுவலர் பிரேமா, மருத்துவ அலுவலர் புனிதவதி மற்றும் சுகாதாரப் பணியாளர்கள், ஊராட்சி மன்றச் செயலாளர், வார்டு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



▲ கும்பகோணத்தை அடுத்த சோழன்மாளிகை ஊராட்சியில் 100 சதவீதம் கரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பட்டீஸ்வரம் அரசு வட்டார துணை மருத்துவமனை மருத்துவ அலுவலர் புனிதவதிக்கு சால்வை அணிவித்து பாராட்டுகிறார் ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயக்குமார்.

இதுகுறித்து ஊராட்சி மன்றத் தலைவர் பி.ஜெயக்குமார் கூறியது: கரோனா முதல் அலை வந்த போது, அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை முழுமையாக கடைபிடித்தோம். தொடர்ந்து, கரோனா 2-வது அலை வந்தபோது, வீடு வீடாகச் சென்று பொதுமக்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்து, முகக்கவசங்களை வழங்கினோம். வாரம் இருமுறை ஊராட்சி முழுவதும் கிருமிநாசினி தெளித்தோம்.

மேலும், கரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, ஊராட்சியில் வசிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதுகுறித்து பட்டீஸ்வரம் அரசு வட்டாரத் துணை மருத்துவமனை மருத்துவ அலுவலர் புனிதவதி கூறியது: சோழன்மாளிகை ஊராட்சியில் பொதுமக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வந்தனர். குறிப்பாக, கடந்த ஆக.4-ம் தேதி தொடங்கி ஆக.14-ம் தேதி வரை வீடு வீடாகச் சென்று தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன என்றார்.

# சேலம் அரசு மருத்துவமனையில் ஐஏஎஸ் அதிகாரிக்கு பிரசவம்

● கேரளாவில் சார் ஆட்சியராக பணியாற்றுகிறார்

■ சேலம்



▲ தர்மலாஸ்ரீ

சேலம் மாவட்டம் வாழப்பாடியை அடுத்த பேளூர் கரடிப்பட்டியைச் சேர்ந்தவர் தர்மலாஸ்ரீ (29). இவர், 2019-ல் ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்று, தற்போது கேரள மாநிலம் ஆலப்புழை மாவட்டத்தில் சார் ஆட்சியராக பணியாற்றி வருகிறார். தர்மலாஸ்ரீக்கும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தாமரைக் கண்ணன் என்பவருக்கும் ஓராண்டுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது. தாமரைக் கண்ணன் சென்னையில், தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவ உயர்கல்வி (எம்டி) பயின்று வருகிறார்.

இந்நிலையில், கர்ப்பமாக இருந்த தர்மலாஸ்ரீ பிரசவத்துக்காக, கரடிப்பட்டியில் உள்ள தாய் வீட்டுக்கு வந்திருந்தார். பிரசவ சிகிச்சைக்காக, சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 17-ம் தேதி சேர்ந்தார். அங்கு அவருக்கு, நேற்று முன்தினம் நள்ளிரவு அறுவை சிகிச்சை மூலம் பெண் குழந்தை பிறந்தது.

இதுகுறித்து அவரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் கூறுகையில், 'தனியார் மருத்துவமனையில் பிரசவ சிகிச்சையை மேற்கொள்ளலாம் என்று கூறினோம். ஆனால், அதற்கு ஒப்புக் கொள்ளாமல் தர்மலாஸ்ரீ அரசு மருத்துவமனையில்தான் பிரசவ சிகிச்சை செய்து கொள்வேன் என்று உறுதியாகக் கூறினார். அவரது விருப்பப்படி, சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டார். சேலம் அரசு மருத்துவமனையில் சிறப்பான சிகிச்சை அளிக்கப்படுகிறது' என்றனர்.

சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் வள்ளி சத்யமூர்த்தி, மகப்பேறு சிகிச்சைப் பிரிவு துறைத் தலைவர் டாக்டர் சுபா ஆகியோர் கூறும்போது, 'தர்மலாஸ்ரீ இங்கு மருத்துவ பரிசோதனைக்கு வந்திருந்தார். சேலம் அரசு மருத்துவமனையில் பிரசவ சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்று விருப்பத்துடன் வந்ததாக தெரிவித்தார். அவருக்கு பிரசவ கால சர்க்கரை நோய் ஏற்பட்டிருந்ததால், அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருந்தது. தற்போது, தாயும், சேயும் நலமாக உள்ளனர்' என்றார்.

தமிழக எம்பிக்களுக்கு இந்தியில் கடிதம் அனுப்பிய விவகாரம்

# இந்திய அலுவல் மொழி சட்டத்தை பின்பற்ற மத்திய அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

■ மதுரை

தமிழக எம்பிக்களின் ஆங்கில கடிதத்துக்கு இந்தியில் பதில் அனுப்பும் விவகாரத்தில், மத்திய அரசும், அதன் அதிகாரிகளும் இந்திய அலுவல்மொழிச்சட்டத்தை பின்பற்ற வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு:

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியில் கடிதம் அனுப்பும் நடைமுறையை மத்திய அரசு தொடர்ந்து கடைபிடித்து வருகிறது. தமிழக மக்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யக் கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பும் கடிதங்களுக்கும் இந்தியில் பதில் அனுப்புகிறார்கள்.

இது அரசியலமைப்பு சட்ட உரிமைகளுக்கும், 1963-ம் ஆண்டின் அலுவல் மொழிச் சட்டத்துக்கும் முரணானதாகும். இந்தி பேசாத மாநிலங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் உரிமைகளை மீறுவதாகும். எனவே, தமிழக அரசுக்கும், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களுக்கும் இந்தி மொழியில் கடிதம் அனுப்பக் கூடாது, ஆங்கிலத்தில் மட்டுமே கடிதங்கள் அனுப்ப வேண்டும் என மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனு மீது நீதிபதிகள் என்.கிருபாகரன், எம்.துரைசாமி அமர்வு பிறப்பித்த உத்தரவு: தாய் மொழி என்பது மிகவும் முக்கியமானது. அடிப்படை கல்வி தாய் மொழியிலேயே வழங்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக தற்போது ஆங்கில வழி கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஆங்கில மொழிக்கு பொருளாதார அடிப்படையிலும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. இருப்பினும் எந்த தகவலும், விளக்கமாக இருந்தாலும் தாய்மொழியில் புரியும்போது மட்டுமே முழுமை அடைகிறது.

இந்தியாவில் சில மொழிகள் ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை. பல மொழிகள் நூறு ஆண்டுகள் பழமையானவை. ஒவ்வொரு மொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றின் வளர்ச்சிக்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு மாநில அரசு எந்த மொழியில் மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்புகிறதோ, அதே மொழியிலேயே மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். இதை இந்திய அலுவலக மொழிச் சட்டமும் உறுதி செய்கிறது.

ஆனால் மனுதாரரின் ஆங்கில கடிதத்துக்கு இந்தி மொழியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதில் விதியை மீறும் எண்ணமில்லை என மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் மத்திய அரசு மற்றும் அதன் அலுவலர்கள் இந்திய அலுவல் மொழிச் சட்டத்தை முறையாக பின்பற்ற வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

# 'அவன் இவன்' திரைப்பட வழக்கில் இயக்குநர் பாலா விடுதலை

■ திருநெல்வேலி



▲ அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் இருந்து வெளியே வரும் பாலா.

கடந்த 2011-ம் ஆண்டு திரைப்பட இயக்குநர் பாலா இயக்கத்தில் நடிகர்கள் விஷால், ஆர்யா நடித்த 'அவன் இவன்' திரைப்படம் வெளியானது. இதில் நெல்லை மாவட்டத்தில் பிரசித்திபெற்ற சொரிமுத்து அய்யனார் கோயில் பற்றியும், சிங்கம்பட்டி ஜமீன்தார் பற்றியும் அவதூறாக சித்தரிக்கப்பட்டதாகக் கூறி, சிங்கம்பட்டி ஜமீனைச் சேர்ந்த சங்கராத்மஜன் என்பவர் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கு அம்பாசமுத்திரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்தது.

நடிகர் ஆர்யா தரப்பில், படத்தில் இடம்பெற்ற காட்சிகளுக்கு வருத்தம் தெரிவித்ததை அடுத்து வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். பாலா மீதான விசாரணை நடந்து வந்தது.

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. இயக்குநர் பாலா நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். நீதித் துறை நடுவர் கார்த்திகேயன் நேற்று அளித்த தீர்ப்பில், 'அவன் இவன்' படத்தில் ஜமீன் குறித்தோ, சொரிமுத்து அய்யனார் கோயிலை பற்றியோ அவதூறு பரப்பியதாக எவ்வித ஆதாரமும் நிரூபிக்கப்படவில்லை. இயக்குநர் பாலா விடுவிக்கப்படுகிறார்' என தெரிவித்தார்.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு

# ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் ரூ.3 கோடிக்கு காய்கறி விற்பனை

■ ஒட்டன்சத்திரம்

தமிழகத்தின் பெரிய மார்க்கெட்களில் ஒன்றான திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் இருந்து 60 சதவீத காய்கறிகள் கேரள மாநிலத்துக்கு விற்பனைக்கு செல்கின்றன.

கேரள மாநிலத்தின் முக்கியப் பண்டிகையான ஓணம் நாளை (ஆக.21) கொண்டாடப்படுகிறது. இதனால் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் கேரள வியாபாரிகள் காய்கறிகளை அதிகம் வாங்குவதில் ஆர்வம் காட்டினர். வழக்கத்தைவிட பலமடங்கு அதிகம் காய்கறிகள் கேரளாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்று முன்தினம் கேரளாவுக்கு முருங்கை, வெண்டைக்காய், பூசணிக்காய், தட்டாங்காய், சுனாமி காய், கோவக்காய், வெங்காயம், தக்காளி என 150 டன்னுக்கு மேலான பல்வேறு காய்கறிகளை வாங்கி கேரள வியாபாரிகள் லாரிகளில் அனுப்பிவைத்தனர். 2-வது நாளான நேற்று 100 டன்னுக்கும் மேலான காய்கறிகள் அனுப்பி வைக்கப்பட்டன. முதல் நாள் வர்த்தகம் 2 கோடி ரூபாய்க்கும், 2-வது நாளான நேற்று ஒரு கோடி ரூபாய்க்கும் காய்கறிகளை கேரள வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

கேரளாவில் கரோனா கட்டுப்பாடுகளால் கடந்த ஓணம் பண்டிகைக்கு காய்கறிகள் விற்பனையானதை விட இந்த ஆண்டு குறைவாகவே விற்பனையானதாக கமிஷன் கடை உரிமையாளர்கள் கூறினர்.

திமிங்கலம் உமிழும் மெழுகுப் பொருள்

# ரூ.23 கோடி மதிப்பிலான அம்பர் கிரீஸ் பறிமுதல்

■ தூத்துக்குடி

தூத்துக்குடியில் மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு உதவி இயக்குநர் கார்த்திகேயன் தலைமையிலான அதிகாரிகள், தெர்மல் நகர் கேம்ப்-2 கடற்கரை பகுதியில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்துக்கு இடமான வகையில் அங்கு வந்த காரை சோதனையிட்டனர். காரில் மெழுகு போன்ற பொருளை கண்டறிந்தனர். அது, திமிங்கலம் உமிழும் அரிய வகை பொருளான அம்பர் கிரீஸ் என்பது தெரியவந்தது.

காரில் இருந்த 23 கிலோ எடை கொண்ட அம்பர் கிரீஸை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். சர்வதேச சந்தையில் ஒரு கிலோ அம்பர் கிரீஸ் ரூ.1 கோடிக்கு விலை போகும் என்றும், பறிமுதல் செய்யப்பட்ட அம்பர் கிரீஸின் சர்வதேச மதிப்பு ரூ.23 கோடி எனவும் வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 3 பேர் கைது

அம்பர் கிரீஸை கடத்தி வந்ததாக திருநெல்வேலி மேலப்பாளையத்தைச் சேர்ந்த சதாம் உசேன் (30), தூத்துக்குடி மீனாட்சிபுரத்தை சேர்ந்த பெரியசாமி(55), திருநெல்வேலி மாவட்டம் தருவையைச் சேர்ந்த பிரபாகரன்(39) ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டனர். காரும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதுபோல் கடந்த ஜூனில் திருச்செந்தூர் கடற்கரைப் பகுதியில் கடத்துவதற்காக வைத்திருந்த ரூ.2 கோடி மதிப்பிலான 2 கிலோ அம்பர் கிரீஸை போலீஸார் பறிமுதல் செய்து 6 பேரை கைது செய்தனர். அம்பர் கிரீஸ் தொடர்ந்து பிடிபடுவதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மாவட்ட கடற்கரைப் பகுதியை மத்திய, மாநில உளவுப் பிரிவினர் தீவிரமாக கண்காணிக்கின்றனர்.

### அம்பர் கிரீஸ்?

20 வயதுக்கு மேல் உள்ள திமிங்கலங்கள், உடலில் இருந்து உற்பத்தியாகும் மெழுகு போன்ற பொருளை வாய் வழியாக உமிழும். இதுவே, அம்பர் கிரீஸ். கடலில் மிதக்கும் தன்மை கொண்ட அம்பர் கிரீஸ் உயர்தர நறுமணப் பொருட்கள் தயாரிக்க பயன்படுகிறது. துபாய் உள்ளிட்ட நாடுகளில் நறுமணப் பொருட்கள் தயாரிப்புக்கு அம்பர் கிரீஸ் பயன்படுத்தப்படுகிறது. எகிப்தியர்கள் பழங்காலத்தில் மருந்துப் பொருளாக இதை பயன்படுத்தியுள்ளனர். இந்தியாவில் இதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்து தமிழ் திசை
# இந்து டாக்கீஸ்
உலகத் திரை உலா
வெள்ளி, ஆகஸ்ட் 20, 2021 hindutalkies@hindutamil.co.in

# நயன்தாராவின் வெற்றிக் கொடி!




■ ச.கோபாலகிருஷ்ணன் ■

**நயன்தாரா நடிப்பில் ஓடிடியில் வெளியாகியுள்ள 'நெற்றிக்கண்' பரவலான விமர்சனப் பாராட்டுக்ளை பெற்றுள்ளது. பெருவாரியான ரசிகர்களையும் திருப்திபடுத்தியுள்ளது. படத்தில் குறைகண்டவர்கள்கூட, இந்தப் படத்தில் பார்வையிழந்த முன்னாள் சிபிஐ அதிகாரி துர்காவாக மையக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் நயன்தாராவின் நடிப்பைக் கொண்டாடுகிறார்கள்.**

பெருந்தொற்றால் திரையரங்குகள் மூடிக் கிடக்கும் சூழலில், பல முன்னணி நட்சத்திரங்கள், இயக்குநர்களின் திரைப்படங்கள் ஓடிடி தளத்தில் நேரடியாக வெளியாகிவருகின்றன. ஆனால், சூர்யாவின் 'சூரரைப் போற்று', பா.இரஞ்சித்தின் 'சார்பட்டா பரம்பரை' என சில படங்கள் மட்டுமே ரசிகர்களை திருப்திப்படுத்தின. நாயகியை மையமாகக்கொண்ட திரைப்படங்களில் ஜோதிகாவின் 'பொன்மகள் வந்தாள்', கீர்த்தி சுரேஷின் 'பெண்குயின்', 'மிஸ். இந்தியா', த்ரிஷாவின் 'பரம்பத விளையாட்டு' உள்ளிட்ட பல படங்கள் ரசிகர்களுக்கு ஏமாற்றத்தைத் தந்தன. அதே நேரம் கடந்த தீபாவளிக்கு வெளியான 'மூக்குத்தி அம்மன்', தற்போது வெளியாகியிருக்கும் 'நெற்றிக்கண்' என நயன்தாரா நடிப்பில் இதுவரை நேரடியாக ஓடிடியில் வெளியாகியுள்ள இரண்டு படங்களுமே ரசிகர்களையும் விமர்சகர்களையும் கவர்ந்துள்ளன. ஆக ஓடிடியிலும் நயன்தாராவின் வெற்றிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

### மாறிவரும் கதாபாத்திரங்கள்

ஓடிடியில் பெண் மையக் கதைகள் கணிசமான எண்ணிக்கையில் வெளியாகியுள்ளன. காஜல் அகர்வால் நடித்த 'லைவ் டெலிகாஸ்ட்', தமன்னா நடித்த 'நவம்பர் ஸ்டோரி' ஆகியவற்றையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம். தமிழ் சினிமாவில் நாயகியரை முதன்மைக் கதாபாத்திரமாக முன்னிறுத்தும் பெண்மையக் கதைகளைக் கொண்ட படங்களுக்கான சந்தை மதிப்பு புத்துயிர் பெற்றிருப்பதன் தொடர்ச்சியாகவே இதைப் பார்க்க வேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகளில் 'மாயா', 'அறம்', 'கோலமாவு கோகிலா' என பெண் மையக் கதாபாத்திரங்களில் நயன்தாரா நடித்த படங்களின் வெற்றியும் விமர்சகர்களிடம் அவற்றுக்குக் கிடைத்த பாராட்டும் இந்த நிலையை மாற்றியமைத்தன. அந்த வகையில் பெண்மையக் கதைகளுக்கு புத்துயிரூட்டியவர் என்று நயன்தாராவைச் சொல்லலாம். அது மட்டுமல்ல; எழுதப்படும் பெண்மையக் கதாபாத்திரங்களின் தன்மையையும் மாற்றியமைத்திருக்கிறார்.

பெண்மையக் கதைகளில் மட்டுமல்லாமல் ரஜினிகாந்த், அஜித், விஜய் என மாஸ் கதாநாயகர்களின் படங்களில் நடிக்கும்போதும் நயன்தாராவுக்கென்றே வலுவான கதாபாத்திரங்கள் எழுதப்படுகின்றன. குறிப்பாக 'விஸ்வாசம்' படத்தில் தன்னுடைய கொள்கைக்காகக் கணவனைப் பிரிந்து வாழும் சுயசார்புமிக்கப் பெண்ணாக நயன்தாராவின் கதாபாத்திரம் அமைந்திருந்தது. பொதுவாக, கருத்து வேறுபாட்டால் கணவனைப் பிரிந்துவாழும் பெண்களை அறிவுரை கூறியோ, அடக்கியோ திருத்தப்படவேண்டியவர்களாகவே தமிழ் சினிமா சித்தரித்து வந்துள்ளது. அதிலிருந்து ஒரு புதிய மாற்றமாக இந்தக் கதாபாத்திரத்தைப் பார்க்கலாம்.

ஒரு ஆண் நடிகரால் செய்ய முடிந்த அனைத்தையும் தன்னாலும் செய்ய முடியும் ரசிகர்களும் அவற்றை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நயன்தாரா தான் நடிக்கும் படங்களில் படிப்படியாக நிரூபித்துவருகிறார். 'மாயா' படத்தில் கணவனை பிரிந்து வாழும் அன்னையாகவும் 'அறம்' படத்தில் மக்களுடன் களத்தில் நின்று போராடும் மாவட்ட ஆட்சியராகவும் நடித்த நயன்தாராவுக்கு அவற்றில் பெண்களுக்கு உரித்தான விஷயங்களை மட்டுமே செய்ய முடிந்தது. 'கோலமாவு கோகிலா' படத்தில் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் பெண்ணாக, அதனால் விளையும் ஆபத்துகளை தனித்து சமாளிப்பவராக நடித்திருந்தார். இதில் எந்த ஆண் நடிகரும் அவருக்கு துணைபுரிய மாட்டார்கள். இந்தப் படம் பிரம்மாண்ட வெற்றியைப் பெற்றது. அடுத்ததாக 'இமைக்கா நொடிகள்' படத்தில் கணவனின் மரணத்துக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கும் சிபிஐ அதிகாரியாக நடித்திருந்தார். இதில்



துப்பாக்கியின் துணையுடன் வில்லன்களை வீழ்த்தும் கதாபாத்திரம் அமைந்தது. அதே நேரம் அவருடைய தம்பியாக நடித்த அதர்வாவுக்கே உடல்வலிமையை வெளிப்படுத்தும் சண்டைக் காட்சிகள் அமைந்திருந்தன. எதிரிகளை வீழ்த்துவதில் இருவருக்கும் சமமான முக்கியத்துவம் இருந்தது.

### நாயகியின் உடல்வலிமை

தற்போது 'நெற்றிக்கண்', பெண்களைக் அடித்துத் துன்புறுத்தி பாலியல் அடிமைகளாக வைத்திருக்கும் கொடூர வில்லனான அஜ்மலை, இறுதி மோதலில் நயன்தாரா தீர்த்துக்கட்டுகிறார். காவல்துறை அதிகாரிகளும் மற்ற ஆண் கதாபாத்திரங்களும் அவருக்குத் துணைபுரிகின்றனர். அதேபோல் அஜ்மலிடம் சிக்கிக்கொள்ளும்போது தன்னுடைய உடல்வலிமையால் அவரை அடித்து வீழ்த்தி நயன்தாரா தப்பிப்பது போன்ற காட்சிகளும் படத்தில் இடம்பெற்றுள்ளன. பொதுவாக ஆண் நட்சத்திரங்களுக்கென்றே அமைக்கப்படும் உடல்வலிமையைப் பறைசாற்றும் சண்டைக் காட்சிகள் ஒரு பெண் நட்சத்திரத்துக்கு வைக்கப்படுவதும் அது ரசிகர்களின் வரவேற்பை பெறுவதும் நயன்தாராவுக்கு கூடிவந்திருக்கிறது. அந்த வகையில் பெண்களையும் பெண் கதாபாத்திரங்களையும் பயன்படுத்தும் விதத்தில் ஒரு புதிய மாற்றத்தை நயன்தாராவின் முன்மாதிரி தொடங்கிவைத்துள்ளது. அதேபோல், இந்தப் படத்தில் பெண்களின் பாலியல் ஒழுக்கத்தை முன்னிறுத்தி தனது குற்றத்தை நியாயப்படுத்தி வில்லன் பேசும் வசனங்களுக்கு நயன்தாரா கொடுக்கும் பதிலடி பெண்களின் அந்தரங்கத்தில் தலையிட்டு அவர்களை இழிவுபடுத்தும் ஆண்மையச் சிந்தனை மீதான சவுக்கடி. நயன்தாராவின் தனிப்பட்ட வாழ்க்கையை வைத்து, அவரை இழிவுபடுத்துபவர்கள் மீதான சாடலாகவும் இந்த வசனம் அமைந்திருந்தது. பொதுவாக பெண்களுக்கு ஆதரவான இதுபோன்ற பதிலடிகளை ஆண்களே கொடுப்பார்கள். ஆனால், இந்தப் படத்தில் நயன்தாரா இப்படிப்பட்ட வசனத்தைப் பேசுவது, அதுவும் ரசிகர்களிடம் எதிர்பார்த்த தாக்கத்தை ஏற்படுத்துவதும் இன்னுமொரு வரவேற்கத்தக்க தொடக்கம்.

### மறுவருகையில் முதலிடம்

நடிகைகள் மிகச் சில ஆண்டுகளே நாயகிகளாக நடிக்க முடியும் என்கிற தமிழ் சினிமாவின் எழுதப்படாத விதியை மாற்றியதில் நயன்தாராவுக்கு முதன்மைப் பங்கு உண்டு. நயன்தாரா அறிமுகமாகி 18 ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. இடையில் தனிப்பட்ட காரணங்களால் சில ஆண்டு இடைவெளி எடுத்துக்கொண்டார். முதல் கட்டத்தில் முன்னணி நடிகையரில் ஒருவராக இருந்த நயன்தாரா, மறுவருகையில் இன்னும் பல படி முன்னேறி இன்று சந்தேகத்துக்கிடமின்றி உச்ச நட்சத்திரமாகத் திகழ்கிறார். அவருடைய படங்கள் தொடர்ந்து வெற்றிபெறுகின்றன. 'ஐரா', 'கொலையுதிர் காலம்' போன்ற தோல்விப் படங்களில்கூட அவருடைய பங்களிப்பு சோடைபோவதில்லை. அனைத்து வயதினரிலும் அவருக்கு அதிக எண்ணிக்கையிலான ரசிகர்கள் இருக்கிறார்கள். தென்னிந்திய சினிமாவில் எத்தனையோ நடிகைகள் வெற்றிவாகை சூடியிருந்தாலும் சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்பட்ட முதல் பெண் நயன்தாராதான். திரைப்படங்களில் தன் பெயருக்கு முன்னொட்டாக போடப்படும் லேடி சூப்பர்ஸ்டார் என்னும் அடைமொழிக்கு தன்னை எல்லா வகையிலும் முழுமையான தகுதிபடைத்தவராக ஆக்கிக்கொண்டிருக்கிறார்.

### காத்திருக்கும் பாலிவுட்

தெலுங்கு, மலையாளத் திரையுலகங்களிலும் எப்போதும் நயன்தாராவுக்கு முன்னணி நட்சத்திர அந்தஸ்துதான். தமிழில் அதிக கவனம் செலுத்துவதால் அவர் மற்ற மொழி நேரடிப் படங்களில் குறைவாகவே நடிக்கிறார். தற்போது இயக்குநர் அட்லி, ஷாருக்கானை நாயகனாக வைத்து இயக்கப்போகும் இந்திப் திரைப்படத்தின் மூலம் பாலிவுட்டிலும் நயன்தாரா கால்பதிக்கப் போவதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அங்கும் வெற்றிக்கொடி நாட்டுவதற்கான அனைத்து சாத்தியங்களையும் கொண்டிருப்பவர் நயன்தாரா.

மலையாளத்தில் அறிமுகமாகி, தமிழ்,தெலுங்கு உட்பட மும்மொழிகளில் முன்னணித் தென்னிந்திய நட்சத்திரமாக உயர்ந்திருக்கும் நயன்தாராவின் வெற்றிப் பயணம் என்பது, தற்போது ஓடிடி வெற்றிகள், ஆண் நட்சத்திரங்களுக்கு இணையான கதாபாத்திரங்களில் நடிப்பது, பாலிவுட் அறிமுகம் என அடுத்தடுத்த பரிணாமங்களை அடைந்துகொண்டிருக்கிறது. இன்னும் பல ஆண்டுகள் தொடரப்போகும் இந்தப் பயணத்தில் மேலும் பல பரிமாணங்கள் இணையும் என்று நம்பலாம்.


தொடர்புக்கு: gopalakrishnan.sn@hindutamil.co.in

# இளமையின் வரம் முதுமையிடம்!

■ ஆர்.சி.ஜெ. ■

**"இருபத்தைந்துக்குள் எல்லாம் முடிந்து விட்டது என நினைக்கும் ஒரு இளைஞன், காலண்டர் ஒருபோதும் மனதின் வயதை தீர்மானிக்க முடியாது என வாழ்க்கையை உற்சாக ஊற்றாக வைத்திருக்கும் அறுபத்தைந்து வயது மூதாட்டியிடம் ஞானம் பெறுவதுதான் இந்தப் படத்தின் கதைக் களம்" என்று தொடங்கினார் 'கதிர்' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகும் தினேஷ் பழனிவேல். பல குறும்படங்களை இயக்கிய அனுபவத்துடன் முழுநீளத் திரைப்படம் இயக்க வந்திருக்கும் அவரிடம் உரையாடியதிலிருந்து…**




▲ தினேஷ்

**ஒரு புதுமுகம் கதாநாயகனாக நடிக்கும் படத்துக்கு கதாபாத்திரத்தின் பெயரையே தலைப்பாக வைக்கும் தைரியம் எப்படி?**

கதை கொடுத்த தன்னம்பிக்கைதான் காரணம். பயணங்கள், புதிய மனிதர்கள், புதிய இடங்கள், இயற்கையுடனான தரிசனம் ஆகியவை வாழ்க்கையில் பற்றுதலை உண்டாக்கக் கூடியவை. இந்தப் படத்தின் கதாநாயகன் கதிர், ஒரு கிராமத்து இளைஞன். பொறியியல் கல்லூரியில் படிக்கும்போது எதிர்கொண்ட சில சம்பவங்களால் மனமொடிந்து போகிறான். படிப்பு முடிந்ததும், தன்னிலை மறந்து ஊர் சுற்றிக்கொண்டிருந்தவனை அப்பா கண்டிக்கிறார். அவரிடம் கோபித்துக்கொண்டு சென்னை மாநகரத்துக்கு வருகிறான். அங்கே தன்னுடைய கல்லூரி நண்பன் செந்திலின் அறையில் தங்குகிறான். அந்த அறையை வாடகைக்கு விட்டிருக்கும் வீட்டின் உரிமையாளர் சாவித்திரி அம்மாவின் கண்டிப்பும் ஒழுங்கும் கதிரை எரிச்சலூட்டுகிறது. இதனால் சாவித்திரி அம்மாவுடன் அடிக்கடிச் சண்டையிடுகிறான் கதிர். ஒரு கட்டத்தில் சாவித்திரி அம்மாவின் நல்ல குணங்களைத் தெரிந்து ராசியாகிறான். பாட்டியின் கடந்த காலக் கதையைக் கேட்டு, அடியோடு மாறிப்போகும் கதிர், ஒரு முக்கியமான முடிவெடுக்கிறான். பொறியியல் கல்வி தந்த அறிவைத் தன்னுடைய கிராம மக்களின் முன்னேற்றத்துக்குப் பயன்படுத்த சொந்த கிராமத்துக்கே திரும்புகிறான். இதில் வாழ்க்கையில் பற்றற்றுத் திரியும் இளைஞர்களின் பிரதியாக கதாநாயகன் வருகிறார். மூத்தவர்களின் அனுபவம்தான் இளைய தலைமுறைக்கான வரம் என்பதை திரைக்கதை எப்படி வெளிக்கொண்டுவருகிறது என்பதுதான் படம்.




**ஒரு குறும்படத்துக்கான கதைபோல் தோன்றுகிறதே?**

கதிரின் கல்லூரி வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களும் சாவித்திரிப் பாட்டியின் 'பிளாஷ் -பேக்' கதையும் பார்வையாளர்களுக்கு இரண்டு மாறுபட்ட உணர்வுகளைக் கொடுக்கும். சென்னையில் நகரும் கதையில் அமைக்கப்பட்டுள்ள சம்பவங்களுடன் பார்வையாளர்கள் மேலும் ஒன்றிப்போவார்கள். இது அனைத்து வயதினருக்குமான வாழ்க்கை உணர்த்த வரும் கதை.

**கதிராகவும் சாவித்திரியாகவும் யார் நடிக்கிறார்கள்?**

கதாபாத்திரத்தில் கதாநாயகனாக வெங்கடேஷ் அறிமுகமாகிறார். சாவித்திரி பாட்டியாக நடித்து வருபவர் 'ஒரு முத்தசி கதா' மலையாளப் படத்தின் மூலம் புகழ்பெற்றிருக்கும் ரஜினி சாண்டி. கதையைக் கேட்டதுமே துள்ளிக் குதித்தார். அவரைத் தமிழுக்குக் கொண்டுவருவது எங்களுக்குக் கிடைத்த கௌரவம். இந்த இரண்டு பேருடன் சந்தோஷ் பிரதாப், பவ்யா ஆகியோர் நடித்து வருகிறார்கள். 'சார்பட்டா பரம்பரை' படத்தில் ராமன் கதாபாத்திரத்தில் நடித்திருப்பவர்தான் சந்தோஷ் பிரதாப்.

**படக்குழுவைப் பற்றிக் கூறுங்கள்?**

தேசிய விருதுபெற்ற 'பாரம்' படத்தின் ஒளிப்பதிவாளர் ஜெயந்த் சேது மாதவன்தான் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். அதேபோல் 'அங்கமாலி டைரீஸ்', 'ஜல்லிக்கட்டு' உட்பட 50-க்கும் மேற்பட்ட மலையாளப் படங்களுக்கு இசையமைத்துவிட்ட முன்னணி இசையமைப்பாளர் பிரசாந்த் பிள்ளை இசையமைக்கிறார். ஏற்கெனவே இரண்டு தமிழ்ப் படங்களுக்கு இவர் இசையமைத்திருந்தாலும் இந்தப் படத்தில் கதையை நகர்த்திச் செல்லும் 5 பாடல்களை கொடுத்திருக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு புஷ்பவனம் குப்புசாமி ஒரு பாடலைப் பாடிக் கொடுத்திருக்கிறார்.

# எட்டு காதல் கதைகள்!




■ எஸ்.எஸ்.லெனின் ■

**'தி நியூயார்க் டைம்ஸ்' நாளிதழின் வெற்றிகரமான பத்திகளில் ஒன்று 'மாடர்ன் லவ்'. உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில் எழுதப்பட்டுவரும் இந்த பத்தியிலிருந்து சிறப்பான கதைகளைத் தொகுத்து அதே தலைப்பில் கடந்த 2019–ல் வெளியானது 'மாடர்ன் லவ்' சீசன் 1. தற்போது, 8 அத்தியாயங்களைக் கொண்ட இரண்டாவது சீஸனை அமேசான் பிரைம் வீடியோ வெளியிட்டுள்ளது. பட்டாம்பூச்சி பருவக் காதல் தொடங்கி, முதிர் தம்பதியரின் பக்குவ காதல் வரை, நேசத்தின் நீள அகலங்களை அலசும் கதைகளில் காதலின் பல பரிமாணங்களை ரசிக்கலாம்.**

*உயிர் கடிகாரம் (Biological clock) தொடர்பான உடநலச் சிக்கலால், காலையில் உறங்கத் தொடங்கி மாலையில் கண் விழிக்கும் பெண் ஸோயி. சூரியனை பார்த்திராது நட்சத்திரங்களோடு மட்டுமே உலாத்தும் அவள் மீது காதலில் விழுகிறான் ஜோர்டன். இயல்பாய் இரவில் தூங்கி பகலில் பணியாற்றும் இளைஞன். இந்த இரவு - பகல் வேறுபாடே அவர்களின் காதலுக்கும் எதிரியாக, அதனை எப்படிக் கடந்து புரிதலில் இணைகிறார்கள் என்பதை விவரிக்கிறது 'தி நைட் கேர்ள் ஃபைன்ட்ஸ் எ டே பாய்'.*

*இறந்துபோன முதல் கணவனின் நினைவாக உடனிருக்கும் வாகனத்தை விற்க தலைப்படும் பெண் அவள். அவனுடைய நினைவுகளில் அலைக்கழிவதன் ஊடே நிகழ்காலக் கணவனை எதிர்கொள்ளும் கதையாக முதல் அத்தியாயம், விவாகரத்தாகி பிரிந்த இருவர், பல ஆண்டுகள் கழித்து மீண்டும் காலம் இணைக்கும் துயரமும் மீட்சியும் கலந்த கடைசி அத்தியாயம் போன்றவை முதிர்ச்சியான காதலைப் பதிவு செய்கின்றன.*

*ஆந்தாலஜியின் வித்தியாசமான கதைகளில் ஒன்று 'எ லைஃப் பிளான் ஃபார் டூ, ஃபாலோட் பை ஒன்'. 12 வயது சிறுமி லில், சக மாணவன் வின்ஸ் மீது புதிரான நேசத்தை உணர்கிறாள். பள்ளி முடித்து கல்லூரி வயதிலும் அவர்களின் நட்பு தொடர்கிறது. ஒரு நெருக்கமான தருணத்தில் அவள் எதிர்பார்த்த ஈர்ப்பின் அதிசயமும் நிகழ்கிறது. ஆனால் நட்பின் வளையத்தை உடைத்ததில் அவனும் உடைந்து போகிறான். அதன் பின்னர் அவனுடனான பிரிவுத் துயரை நகைச்சுவை நிகழ்ச்சிகளில் போக்கும் லில், அப்படியே அத்துறையில் வித்தகராகவும் மாறுகிறாள். இப்போது வின்ஸ் உடனான சந்திப்பு மீண்டும் மலர, அவர்களின் பால்யம் தொட்ட நட்பின் அடுத்த கட்டம் என்னவாகிறது என்கிற சுவாரசியத்துடன் கதை முடிகிறது.*

*ரயில் சிநேகத்தில் கண்டதும் காதலில் விழும் இளஞ்ஜோடி, தங்கள் காதலின் ஆழத்தை பரிசோதிக்க அலைபேசி எண் பகிர்வை நிராகரித்து மறு சந்திப்புக்கான இடத்தை மட்டும் தீர்மானித்து பிரிகிறார்கள். ஆனால் ஊரடங்கு அறிவிப்பு அவர்களின் ஏற்பாட்டை புரட்டிப் போடுகிறது. மெய்யான நேசத்தின் தவிப்பு அதன் பின்னர் என்னவாகும் என்பதை நம்மையே ஊகிக்க விடுகிறது 'ஸ்ட்ரேஞ்சர் ஆன் எ ட்ரெய்ன்' கதை. 'க்ளிஷே' காட்சிகள் இருந்தபோதும் இளமைத் துள்ளலால் ஈர்க்கிறது இந்த அத்தியாயம்.*

*திருமண வேலியை எகிறிக் குதித்துக் கைகோக்கும் தத்தம் வாழ்க்கைத் துணைகளால் மன உளைச்சலுக்கு ஆளாகும் இருவர், 'அவர்கள் போலல்ல நாம்..' என்று பரஸ்பரம் அனுசரணையாகிறார்கள். ஆனால் அது தொடர்ந்ததா என்பதை விவரிக்கும் 'இன் தி வெய்ட்டிங் ரூம்' கதையும் சற்று சுவாரசியமாக நேசத்தை பேசுகிறது.*

*கதைகளின் பின்புலகமாக அமெரிக்காவின் இறுக்கமற்ற கலாச்சாரம் இருந்தாலும் காதலின் உலகப் பொது உணர்வை கடத்துவதில் 'மாடர்ன் லவ் - 2' அத்தியாயங்கள் வெற்றிபெறுகின்றன. இணையருடன் இணைந்து ரசிப்பதற்கான ஆந்தாலஜியாகவும் அமேசானின் மற்றுமொரு வெற்றிகரத் தொடராகவும் 'மாடர்ன் லவ்' சேர்ந்திருக்கிறது.*



ஆப்கானிஸ்தான் அவலத்தை ஐ.நா. சபை, கை கட்டி வேடிக்கை பார்ப்பது வருத்தமளிக்கிறது. ஐ.நா. சபையை மூடிவிட்டு அந்த இடத்தில் பள்ளி அல்லது மருத்துவமனை கட்டி மக்களுக்கு சேவையாற்றலாம்.

● **அபிஷேக் சிங்வி,** காங்கிரஸ் மூத்த தலைவர் ●



காஷ்மீரில் தீவிரவாதத்தை தூண்ட தலிபான்கள் முயற்சி செய்யக்கூடும். இந்த நேரத்தில் இஸ்ரேலை பின்பற்றி தீவிரவாதத்துக்கு எதிராக இந்தியா போர் தொடுக்க வேண்டும். அப்போதுதான் நமது நாடு பாதுகாப்பாக இருக்கும்.

● **சி.டி.ரவி,** பாஜக பொதுச்செயலாளர் ●

| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| 39 ஆயிரம் பேர் குணமடைந்தனர் | 3.15 கோடி பேர் குணமடைந்தனர் |
| 56.36 லட்சம் பேருக்கு தடுப்பூசி | 57 கோடி பேருக்கு தடுப்பூசி |
| 18.73 லட்சம் பரிசோதனை | 50.03 கோடி பரிசோதனை |

# சின்னச் சின்னதாய்...

## நாடு முழுவதும் 3.86 கோடி பேர் உரிய நேரத்தில் 2-ம் தவணை தடுப்பூசி போட்டுக் கொள்ளவில்லை

**புதுடெல்லி:** இந்தியாவில் கோவிஷீல்டு, கோவாக்சின் தடுப்பூசி அதிகம் செலுத்தப்படுகிறது. இதில் கோவிஷீல்டு கரோனா தடுப்பூசி முதல் தவணைக்கு பிறகு 84 நாட்கள் முதல் 112 நாட்களுக்குள் 2-ம் தவணை தடுப்பூசி செலுத்தி கொள்ள வேண்டும்.

கோவாக்சின் முதல் தவணை செலுத்திய பிறகு 28 நாட்கள் முதல் 42 நாட்களுக்குள் 2-ம் தவணை தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். இரு தவணை தடுப்பூசிகளையும் செலுத்திக் கொண்டால் மட்டுமே முழுமையான பலன் கிடைக்கும் என்று மத்திய சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது. இந்த சூழலில் சமூக ஆர்வலர் ராமன் சர்மா என்பவர், 2-ம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்களின் விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோரினார். இதற்கு மத்திய சுகாதாரத் துறை அளித்துள்ள பதிலில், நாடு முழுவதும் 3.86 கோடி பேர் குறிப்பிட்ட காலத்துக்குள் 2-ம் தவணை தடுப்பூசி செலுத்தவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

## எதிர்காலத்தில் 3-ம் தவணை கரோனா தடுப்பூசி பரிந்துரைக்கப்படும்: என்ஐவி இயக்குநர் தகவல்

**புதுடெல்லி;** இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் கீழ் மகாராஷ்டிராவின் புனே நகரில் தேசிய வைராலஜி ஆய்வு நிறுவனம் (என்ஐவி) செயல்படுகிறது. இதன் தலைவர் பிரியா ஆபிரகாம், தனியார் சேனலுக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது:

பெரும்பாலான கரோனா தடுப்பூசிகள் 2 தவணைகளாக செலுத்தப்படுகிறது. ஊக்க தடுப்பூசியாக 3-ம் தவணை தடுப்பூசி செலுத்தும் பரிசோதனை உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. எனினும் பெரும்பாலான நாடுகளில் இன்னும் முதல் தவணை தடுப்பூசியே போடப்படாத நிலையில் 3-ம் தவணை தடுப்பூசி திட்டத்தை உலக சுகாதார அமைப்பு நிறுத்தி வைத்துள்ளது. இந்தியாவில் எதிர்காலத்தில் 3-ம் தவணை கரோனா தடுப்பூசி நிச்சயமாக பரிந்துரை செய்யப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

புனேவை சேர்ந்த சீரம் நிறுவன தலைவர் சைரஸ் பூனவாலா, 3-ம் தவணை கோவிஷீல்டு தடுப்பூசியை செலுத்தி கொண்டுள்ளார். இதுகுறித்து அவர் கூறும்போது, "தடுப்பூசிகள் 6 மாதங்கள் வரை மட்டுமே முழுமையான பலன் அளிக்கும். அதன்பிறகு வீரியம் குறையும். எனவே 3-ம் தவணை கரோனா தடுப்பூசி போட்டுள்ளேன். எனது நிறுவனத்தில் பணியாற்றும் 8,000 ஊழியர்களுக்கும் 3-ம் தவணை தடுப்பூசி செலுத்தப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

## 10-ம் வகுப்பு ஆங்கில தேர்வு எழுதினார் ஹரியாணா முன்னாள் முதல்வர் சவுதாலா

**புதுடெல்லி:** ஹரியாணா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சவுதாலா (86) நேற்று முன்தினம் 10-ம் வகுப்பு ஆங்கிலத் தேர்வு எழுதினார். முன்னதாக, கையில் எலும்பு முறிவு இருப்பதால், தேர்வு எழுத உதவியாளர் வேண்டும் என கோரினார். இதற்கு அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து 2 மணி நேரத்தில் தேர்வு எழுதி முடித்தார். ஹரியாணா மாநிலத்தில் 4 முறை முதல்வராக இருந்தவர் ஓ.பி. சவுதாலா. இந்திய தேசிய லோக் தளம் கட்சியின் தலைவரான இவர், முன்னாள் துணை பிரதமர் தேவிலாலின் மகன் ஆவார். ஹரியாணாவில் ஆசிரியர் நியமனத்தில் நடந்த ஊழல் வழக்கில் சிக்கினார். இந்த வழக்கில் இவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டு, கடந்த 2013 முதல் டெல்லி திகார் சிறையில் தண்டனை அனுபவித்து வந்தார். இந்நிலையில் ஓ.பி.சவுதாலா கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

சவுதாலா சிறையில் இருந்தபோது, தேசிய திறந்தவெளி பள்ளிக் கல்வி நிறுவனம் மூலம் 10-ம் வகுப்பு படித்து கடந்த 2017-ல் தேர்ச்சி பெற்றார். இதையடுத்து 12—ம் வகுப்பு தேர்வை இந்த ஆண்டு எழுதினார். ஆனால் 10-ம் வகுப்புக்கான கட்டாய ஆங்கிலப் பாடத் தேர்வை அவர் இதுவரை எழுதவல்லை என்று கூறி 12-ம் வகுப்பு தேர்வு முடிவு நிறுத்திவைக்கப்பட்டது. இதையடுத்து 10-ம் வகுப்பு ஆங்கிலப் பாடத் தேர்வை நேற்று முன்தினம் அவர் எழுதினார்.

# தலிபான்களை ஆதரிப்போரின் முகத்திரையை கிழிக்க வேண்டும்

● உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் கருத்து

**லக்னோ**

தலிபான் தீவிரவாதிகளை ஆதரிப்பவர்களின் முகத்திரையை கிழிக்க வேண்டும் என்று உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைப் பிடித்துள்ளனர். இந்நிலையில், தலிபான்கள் தங்கள் நாட்டின் சுதந்திரத்துக்காக போராடுகிறார்கள் என்றும் ஆப்கன் மக்களும் அவர்களின் தலைமையின் கீழ் இருக்க விரும்புகின்றனர் என்றும் சமாஜ்வாதி கட்சி எம்.பி. ஷபிக்குர் ரஹ்மான் பர்க் தெரிவித்திருந்தார். இதற்காக அவர் மீது உ.பி. போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். மேலும் முஸ்லிம் தனிநபர் சட்டவாரிய செயலாளர் உம்ரைன் மஹ்பஸ் ரஹ்மானியும் தலிபான்கள் வெற்றி பெற்றதை வரவேற்று கருத்து கூறியிருந்தார்.

இந்நிலையில், உ.பி.சட்டப்பேரவையில் முதல்வர் யோகி ஆதித்யநாத் கூறும்போது, "தலிபான் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக சிலர் பேசுகின்றனர். ஆப்கானிஸ்தானில் பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக தலிபான் தீவிரவாதிகள் கொடுமைகள் இழைக்கின்றனர். போராட்டம் நடத்தும் சொந்த நாட்டு மக்களையே தலிபான்கள் சுட்டுக் கொல்கின்றனர்.

ஆனால், இங்கே சிலர் வெட்கமே இல்லாமல் தலிபான் தீவிரவாதிகளை ஆதரிக்கின்றனர். தலிபான் தீவிரவாதிகளை ஆதரிப்பவர்களின் முகத்திரையை கிழிக்க வேண்டும். அவர்களை மக்கள் முன் அம்பலப்படுத்த வேண்டும்" என்றார். - பிடிஐ

**கருத்துச் சித்திரம்** கருத்து: **மு.சுப்பையா,** தூத்துக்குடி




▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

### இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்ட

# 87 ஆயிரம் பேருக்கு கரோனா தொற்று

● நாடு முழுவதும் புதிதாக 36,401 பேருக்கு பாதிப்பு

**புதுடெல்லி**

இரண்டுடோஸ்தடுப்பூசிசெலுத்திக் கொண்ட 87,000 பேருக்கு கரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

கரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக, நாடு முழுவதும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்தியாவை பொறுத்தவரை தற்போது கோவாக்சின், கோவிஷீல்டு ஆகிய இரண்டு தடுப்பூசிகளே பெருமளவில் மக்கள் பயன்பாட்டில் இருக்கின்றன. இந்த தடுப்பூசிகளை இரண்டுடோஸ்கள் செலுத்த வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், நாடு முழுவதும் இரண்டு டோஸ் கரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களில் 87,000 பேருக்கு பெருந்தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சக உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த 87 ஆயிரம் பேரில் 46 சதவீதம் பேர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கேரளாவில் மட்டும் சுமார் 80 ஆயிரம் பேருக்கு, முதல் டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கு பிறகு கரோனா தொற்று ஏற்பட்டிருக்கிறது. அந்த மாநிலத்தில் இரண்டு டோஸ் செலுத்திக் கொண்டவர்களில் 40 ஆயிரம் பேர் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்ட பிறகும், வைரஸ் தாக்குகிறது என்றால் இது புதிய வகை கரோனாவாக இருக்கலாம் என விஞ்ஞானிகள் சந்தேகிக்கின்றனர். இதனிடையே, இதுபோன்று இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொண்டதற்கு பிறகும் தொற்று பாதிப்பு ஏற்பட்டவர்களில் 200 பேரின் ரத்தம் மற்றும் சளி மாதிரிகள் சில தினங்களுக்கு முன்பு சோதனை செய்யப்பட்டன. ஆனால், இதில் எந்த புது வகை கரோனா தொற்றும் கண்டறியப்படவில்லை. இருந்த போதிலும், இந்த விவகாரத்தில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாக சுகாதாரத் துறை உயரதிகாரி கூறினார்.

இந்நிலையில், நாடு முழுவதும் நேற்று காலை நிலவரப்படி 24 மணி நேரத்தில் புதிதாக 36,401 பேருக்கு கரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. பெருந்தொற்றால் பாதிக்கப்படுவோரை காட்டிலும் குணமடைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒரே நாளில் 39,157 பேர் கரோனா பாதிப்பில் இருந்து குணமாகி வீடு திரும்பினர். இதனால் நாட்டில் தற்போது கரோனாவுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை 3,64,129 ஆகக் குறைந்துள்ளது. இது, கடந்த 149 நாட்களில் பதிவான குறைவான எண்ணிக்கை ஆகும்.

அதேநேரம் 530 பேர் வைரஸ் பாதிப்புக்கு உயிரிழந்துள்ளனர். இதனால் நாட்டில் இதுவரை பெருந்தொற்றுக்கு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 4,33,049 ஆக உயர்ந்துள்ளது. - பிடிஐ

### ஆப்கானிஸ்தானிலிருந்து

# இந்தியாவுக்கு ஏற்றுமதி இறக்குமதி செய்ய தடை

**புதுடெல்லி**

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் வழியாக வரும் பொருட்களை இறக்குமதி செய்வது மற்றும் ஆப்கனிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

இதுகுறித்து இந்திய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் (எப்ஐஇஓ) டைரக்டர் ஜெனரல் அஜய் சஹாய் கூறியதாவது:

ஆப்கானிஸ்தான் முழுவதையும் தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததன் விளைவாக பாகிஸ்தான் வழியாக இந்தியாவிலிருந்து ஆப்கனுக்கு இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் அனைத்துக்கும் தடை விதித்துள்ளனர்.

இதன் விளைவாக வரும் காலங்களில் இந்தியாவில் உலர் பழங்களின் விலை அதிகரிக்கும். இந்தியாவில் பயன்படுத்தப்படும் உலர் பழங்களில் 85% ஆப்கனிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவிலிருந்து வடக்கு தெற்கு காரிடார் வழியாக சில பொருட்கள் துபாய் வழியாகவும் ஆப்கனுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தியா-ஆப்கன் இடையே மிகச்சிறந்த வர்த்தக உறவு இருந்தது. கடந்த நிதி ஆண்டில் ஆப்கனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு 83.50 கோடி டாலர் ஆகும்.

ஆப்கனிலிருந்து 51 கோடி டாலர் மதிப்பிலான பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இது தவிர இந்திய நிறுவனங்கள் சுமார் 300 கோடி டாலர் அளவுக்கு ஆப்கனில் முதலீடு செய்துள்ளன. சுமார் 400 திட்டப் பணிகள் நடைபெற்று வந்தன. ஆப்கனில் நிலைமை மோசமடைந்துள்ளதால் இரு நாடுகளிடையிலான வர்த்தகமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆப்கனில் நிகழ்ந்து வரும் அரசியல் நிகழ்வுகளை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. அங்குள்ள இந்தியர்களை பத்திரமாக மீட்டு அழைத்து வருவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# ஆப்கனிலிருந்து இந்தியர்களை அழைத்து வர நடவடிக்கை

● மத்திய அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா உறுதி

**ஷாஜாபூர்**

ஆப்கானிஸ்தானில் இருந்து, இந்தியர்கள் அனைவரையும் பத்திரமாக அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா உறுதிபட தெரிவித்தார்.

மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்து மக்களிடம் எடுத்துரைப்பதற்காக மத்திய பிரதேசத்தில் ஜோதிராதித்ய சிந்தியா சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதனிடையே ஷாஜாபூரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

கரோனா பரவல் அதிகமாக இருந்த சமயத்தில், தாயகம் திரும்ப முடியாமல் பல்வேறு நாடுகளில் இந்தியர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களை இந்தியா அழைத்து வருவதற்கு 'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது.

அதேபோல, தற்போது அசாதாரண சூழல் நிலவி வரும் ஆப்கானிஸ்தானில் இருந்து, இந்தியர்களை பத்திரமாக தாய்நாடு அழைத்து வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்கும். ஏர் இந்தியா விமானத்திலோ அல்லது ராணுவ விமானத்திலோ அவர்கள் விரைவில் தாய்நாடு அழைத்து வரப்படுவார்கள். இவ்வாறு அவர் கூறினார். - பிடிஐ



▲ ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது. இதன் காரணமாக இந்தியாவில் முகாமிட்டுள்ள ஆப்கானிஸ்தான் மக்கள் உதவி கோரி டெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பு நேற்று குவிந்தனர். ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள தங்கள் குடும்பத்தினரை மீட்க வேண்டும். அமெரிக்காவில் புகலிடம் அளிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர். படம்: பிடிஐ

# போர் விமானங்களில் புதிய தொழில்நுட்பம்

● ஏவுகணை தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ள டிஆர்டிஓ தயாரிப்பு

**புதுடெல்லி**

ஏவுகணை தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்ளும் சாஃப் தொழில்நுட்பத்துடன் கூடிய ஜெட் விமானங்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்துள்ளது.

உலகம் முழுவதும் எதிரியின் போர் விமானங்களை துல்லியமாக தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. இந்நிலையில், எதிரி நாடுகளின் ஏவுகணைகளை திசைதிருப்பும் திறன் கொண்ட ஜெட் விமானங்களை இந்திய விமானப் படைக்காக டிஆர்டிஓ நிறுவனம் தயாரித்திருக்கிறது. சாஃப் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள டிஆர்டிஓ ஆய்வகத்தில் இந்த விமானங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.



▲ ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் உள்ள டிஆர்டிஓ ஆய்வகத்தில் சாஃப் தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள ஜெட் விமானங்கள். படம்: பிடிஐ

இரண்டு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விமானங்களால் ஏவுகணைகளை திசைதிருப்ப முடியும். ஒன்று, ஃப்ளேர் என்ற தொழில்நுட்பத்துடன் கூடிய விமானங்கள், ஏவுகணையில் இருந்து தப்பிக்க, அதிக அளவிலான நெருப்பை உமிழும். இதன் மூலம், வெப்பத்தை பயன்படுத்தி விமானத்தை துரத்தும் ஏவுகணைகள் திசைதிரும்பிவிடும். ஆனால், வெப்பத்தை தவிர்த்து அலுமினிய உலோகத்தை பயன்படுத்தி விமானங்களை துரத்தும் ஏவுகணைகளிடம் இருந்து இவை தப்பிக்க முடியாது.

ஆதலால், இதனை விட மேம்பட்ட தொழில்நுட்பமாக சாஃப் தொழில்நுட்பம் கருதப்படுகிறது.

சாஃப் தொழில்நுட்ப ஜெட் விமானங்கள் பல்வேறு சோதனைகளை வெற்றிகரமாக முடித்துவிட்டதால், விமானப் படையில் இணைக்கப்பட்டு வருவதாக டிஆர்டிஓ தெரிவித்துள்ளது.

# உச்ச நீதிமன்றத்துக்கு புதிதாக 9 நீதிபதிகள் நியமனம்

● மத்திய அரசுக்கு கொலிஜியம் பரிந்துரை

**புதுடெல்லி**

உச்ச நீதிமன்றத்தில் புதிதாக 9 நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசுக்கு கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தேர்வு குழு, கொலிஜியம் என்றழைக்கப்படுகிறது. இந்த குழுவில் தலைமை நீதிபதி மற்றும் 4 மூத்த நீதிபதிகள் இடம்பெற்றுள்ளனர். கடைசியாக கடந்த 2019-ம் ஆண்டு அப்போதைய தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையில் கொலிஜியம் கூடியது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 34 ஆகும். தற்போது 24 நீதிபதிகள் மட்டுமே பணியில் உள்ளனர். 10 நீதிபதிகள் பணியிடங்கள் காலியாக உள்ளன. இவற்றை நிரப்ப தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையில் கடந்த 17-ம் தேதி கொலிஜியம் கூடியது. இதில் மூத்த நீதிபதிகள் லலித், கான்வில்கர், சந்திரசூட், நாகேஸ்வர ராவ் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் எடுக்கப்பட்ட முடிவின்படி 9 புதிய நீதிபதிகளை நியமிக்கும்படி மத்திய அரசுக்கு பரிந்துரை பட்டியல் அனுப்பப்பட்டது.

கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.எஸ். ஓகா, குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி விக்ரம் நாத், சிக்கிம் உயர் நீதிமன்ற நீதிபதி மகேஸ்வரி, தெலங்கானா உயர் நீதிமன்ற நீதிபதி ஹிமா கோலி, கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி நாகரத்னா, கேரள உயர் நீதிமன்ற நீதிபதி ரவிகுமார், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி சுந்தரேஷ், குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி பெலா திரிவேதி, மூத்த வழக்கறிஞர் நரசிம்ஹா ஆகியோர் பரிந்துரை பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இதில் 3 பேர் பெண்கள் ஆவர். இந்த பரிந்துரை ஏற்கப்பட்டால் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 33 ஆக உயரும்.

தற்போதைய தலைமை நீதிபதி ரமணாவின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் 26-ம் தேதியுடன் நிறைவடைகிறது. அதன் பிறகு பதவி மூப்பின் அடிப்படையில் யு.யு.லலித் தலைமை நீதிபதியாக பதவியேற்று அடுத்த ஆண்டு நவம்பர் 8-ம் தேதி வரை பதவி வகிப்பார்.

அவரை தொடர்ந்து சந்திரசூட் தலைமை நீதிபதியாக பதவியேற்று 2024 நவம்பர் 10-ம் தேதி வரை பதவியில் நீடிப்பார். அவருக்குப் பிறகு சஞ்சீவ் கன்னா தலைமை நீதிபதியாகி 2025 மே 13-ம் தேதி வரை பதவியில் இருப்பார். இதன் பிறகு பி.ஆர். கவாய் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்று 2025 நவம்பர் 23-ம் தேதி வரையும் அவருக்குப் பிறகு சூர்ய காந்த் தலைமை நீதிபதியாகி 2027 பிப்ரவரி 9-ம் தேதி வரையும் பதவி வகிக்க உள்ளனர்.

தற்போது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றிருக்கும் விக்ரம் நாத், சூர்யகாந்துக்குப் பிறகு தலைமை நீதிபதியாக பதவியேற்பார். அவர் 2027 செப்டம்பர் வரை பதவியில் நீடிப்பார்.

### முதல் பெண் தலைமை நீதிபதி

அவருக்குப் பிறகு பரிந்துரை பட்டியலில் இடம்பெற்றிருக்கும் நாக ரத்னா தலைமை நீதிபதியாக பதவியேற்பார். உச்ச நீதிமன்ற வரலாற்றில் முதல் பெண் தலைமை நீதிபதி என்ற பெருமையை அவர் பெறுவார். எனினும் 36 நாட்கள் மட்டுமே அவர் தலைமை நீதிபதி பொறுப்பில் இருப்பார்.

ஒருவேளை விக்ரம் நாத் பரிந்துரை நியமனத்தை மத்திய அரசு ஏற்காவிட்டால், நாகரத்னா 2027 பிப்ரவரி 10-ம் தேதி தலைமை நீதிபதியாக பதவியேற்று 2027 அக்டோபர் 29-ம் தேதி வரை பதவியில் நீடிப்பார். நாகரத்னாவுக்குப் பிறகு நரசிம்ஹா புதிய தலைமை நீதிபதியாக பதவியேற்பார். - பிடிஐ


INDIA'S MOST TRUSTED JEWELLERY 60 YEARS OF EXCELLENCE SINCE 1962
A UNIT OF The Chennai Silks
புதுப்பொலிவுடன் விரிவுபடுத்தப்பட்டுள்ள
ஸ்ரீ குமரன் தங்கமாளிகையில்...
INDIA'S BEST DESIGNS
இப்பொழுது 2 மடங்கு கலெக்ஷன்களுடன்
டிரெண்டி மற்றும் டிரெடிஷனல் திருமண நகை கலெக்ஷன்கள்
ஸ்பெஷல் திருமண நகை செட் 5 பவுன் முதல் 60 பவுன் வரை
மாங்கல்யா
திருமண நகை கலெக்ஷன்கள்
ஸ்ரீ குமரனில் எல்லாமே
FIXED PRICE
மார்க்கெட்லேயே அதுதாங்க LOWEST PRICE
நகை வாங்கணும்னா எல்லா கடையிலேயும் பார்த்துட்டு
கடைசியா, ஸ்ரீ குமரன் தங்கமாளிகைக்கு வாங்க...
பிறகு, ஸ்ரீ குமரனில் மனம் நிறைந்து வாங்குவீங்க.
PAY ONLY FOR GOLD NOT FOR STONES
கற்களுக்கு விலை இல்லை
India's Most Trusted Jeweller
ஸ்ரீ குமரன் தங்கமாளிகை
தங்கம் • வைரம் • பிளாட்டினம் • சில்வர்
தி.நகர் : உஸ்மான் ரோடு, சென்னை - 600 017. ✆ : 044 - 2431 0888
வேளச்சேரி : இரயில் நிலையம் அருகில், சென்னை - 600 042. ✆ : 044 - 2243 4888
குரோம்பேட்டை : GST ரோடு, சென்னை - 600 044. ✆ : 044 - 2241 3888
திருவள்ளூர் : கலெக்டர் அலுவலகம் அருகில், திருவள்ளூர் - 602 001. ✆ : 044 - 2767 7888
கார் பார்க்கிங் வசதியுடன் Shop online at www.sktm.in | Toll Free No: 1800 425 6663 தமிழ்நாடு - தெலுங்கானா - புதுச்சேரி